
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | புரட்டாதி 06, வெள்ளிக்கிழமை 22.09.2017 | கதிர் 320

- ★ மத்திய, மாகாண நிறுவனங்களின் 'ஒருமித்த நாடு'
- ★ இரண்டாவது (செனட்) சபை உருவாக்கம்
- ★ மாகாணங்களுக்கு கணிசமான காணி அதிகாரம்
- ★ இணைப்புக் குறித்து தெளிவான முடிவில்லை
- ★ ஆனால் அதிகளவில் அதிகாரப் பகிர்வுக்கு இணக்கம்

# இடைக்கால அறிக்கை வெளியானது

கொழும்பு, செப்ரெம்பர் 22

'மத்திய மாகாண நிறுவனங்களின் ஒருமித்த நாடு' என்ற கட்டமைப்போடு இலங்கை தேசம் அமைக்கின்றமையை வெளிப்படுத்துவதாக புதிய அரசமைப்பு இருக்கும்.

-அதற்கேற்றவகையிலான அரசமைப்புஒன்றைஉருவாக்குவதற்கு வழிசெய்யும் இடைக்கால அறிக்கை நேற்று அரசமைப்புப் பேரவையாகக் கூடிய நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. பக்கம் 03 »

## ஒக்ரோபர் கடைசியிலேயே 3 நாள்கள் இடைக்கால அறிக்கை மீது விவாதம்

கொழும்பு, செப்.22

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான இடைக்கால அறிக்கை நேற்று வெளியிடப்பட்டமையை அடுத்து, இந்த அறிக்கை குறித்தும் அதைத் தொடர்ந்து எழுந்துள்ள விடயங்கள் குறித்தும் நாடாளுமன்றம் மீண்டும் அரசமைப்புப் பேரவையாக மூன்று நாள்கள் தொடர்ந்து கூடி விவாதம் நடத்த உள்ளது.

விரைவில் இந்தமூன்று நாள்விவாதம்நடைபெறும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அரசமைப்புப் பேரவைக் கூட்டத்தில் அறிவித்தாராயினும் அது பெரும்பாலும் ஒக்ரோபர் கடைசி வாரத்திலேயே சாத்தியமாகும் பக்கம் 18 »

## இனி நகல் யாப்புத் தயாரிப்பில் வழிகாட்டல் குழு ஈடுபடுமாம்!

கொழும்பு,செப்.22

"அரசமைப்புத் தயாரிப்புக்கான வழிகாட்டல் குழு தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டது. அத்துடன் அதன் பணி முடிந்துவிடவில்லை. இனித்தான் அதற்கு முக்கிய வேலை உள்ளது. அரசமைப்பு நகலை இனித்தயாரிப்பது வழிகாட்டல் குழுவின் முக்கிய பொறுப்பாகும்"

– இவ்வாறு வழிகாட்டல் குழுவின் நடவடிக்கையில் அதிக பங்களிப்பு வழங்கிவரும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமையை ஒட்டி இன்னொரு தடவை வழிகாட்டல் குழு கூடவிருக்கின்றது. பக்கம் 18 »



## நியூயோர்க்கில் மைத்திரியை குற்றவாளிக் கூண்டில் நிறுத்திய தமிழ் மக்கள்!

நியூயோர்க், செப்.22

நியூயோர்க்கில் ஐ.நா.பொதுச் சபையின் 72 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றிக் கொண்டிருந்தபோது, ஐ.நா. சபைக்கு முன்னால் குற்றவாளிக் கூண்டில் இலங்கை ஜனாதிபதியை நிறுத்துவது போன்ற ஒத்திகை நிகழ்வு ஒன்றை அங்கு திரண்ட தமிழ்மக்கள் நடத்தினர்.

அங்கு இந்த எதிர்ப்பு நிகழ்வை நாடு கடந்த தமிழீழ அரசு ஏற்பாடு செய்திருந்தது.

ஐ.நாவின் முன்னால் பல்லின மக்களும் கவனவீர்ப்புப் போராட்டங்களை மேற்கொண்டிருந்தவேளை, பக்கம் 18 »

## சகலரின் இணக்கத்துடனான அரசமைப்புக்கு அரிய வாய்ப்பு

### ஒன்றுபட்டுச் செயற்பட சம்பந்தன் அழைப்பு



கொழும்பு, செப். 22

"நியாயமான ஒருங்கிசைவின் அடிப்படையில் சகல தரப்பினரினதும் இணக்கத்துடன் ஓர் அரசமைப்பை உருவாக்கும் அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. இந்த வாய்ப்பைத் தவற விடக்கூடாது என எல்லோரும் நியாயமாகவும் உறுதியுடனும் இருந்தால், இது வெற்றிபெற்று சித்திக்கக்கூடிய எல்லாச் பக்கம் 18 »

அளப்பு அருணாசலம்



ஜனநாயகக் காவலர் சொல்லுறார் பாருங்கோ...!

## சகலரும் ஏற்கும் யாப்பு பிரதமர் ரணில் உறுதி!



கொழும்பு, செப்.22

சகலரும் ஏற்றுக் கொள்ளும் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என நேற்று நாடாளுமன்றம் அரசமைப்பு சபையாகக் கூடிய போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

பேரவையின் பக்கம் 18 »

## 17நாடுகளின் இராஜதந்திரிகளுக்கு சுமந்திரன், ஜயம்பதி விளக்கமளிப்பு


கொழும்பு, செப்.22

அரசமைப்புப்பேரவையாகக் கூடிய நாடாளுமன்றத்தில் நேற்றுக் காலை புதிய அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமையை அடுத்து, அது குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு நேற்று விளக்கமளிக்கப்பட்டது.

சுவிஸ் தூதரின் இல்லத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் கணிசமான பங்களிப்பை பக்கம் 18 »

### பின்கதவால் சட்டங்களை நிறைவேற்றி அதன் மூலம்

## தேர்தல்களை முடக்கி ஜனநாயகத்தை நாசமாக்குகின்றது நல்லாட்சி அரசு



### சீறுகின்றார் மஹிந்தர்

கொழும்பு, செப்.22

மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடிப்பது தவறு என உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்க – அதேவேலையை வேறுசட்டவடிவத்தில், உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டலுக்கு மாறான வகையில்,பின்கதவால் கொண்டு வந்து நிறை வேற்றுகிறது நல்லாட்சி அரசு.

"இதன்மூலம் நாட்டின் பக்கம் 18 »

# சைட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா வைத்தியர்கள் புறக்கணிப்பு!






வவுனியா, செப். 22

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியா பொது வைத்தியசாலை வைத்தியர்கள் நேற்றுக் காலை முதல் இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக தூர பகுதிகளில் இருந்து வந்து செல்லும் நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாது ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

திடீர் காய்ச்சல் மற்றும் விசக்கடி ஆகிய இரண்டுக்குமான வெளிநோயாளர் பிரிவு செயற்படுகின்ற அதே வேளை, அவசர விபத்து பிரிவு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவு இரண்டும் வழமை போல் செயற்பட்டு வருகின்றன.

குறிப்பாக, வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற வைத்தியர்கள் முன்னெடுத்து வரும் பணிப்புறக்கணிப்பு காரணமாக வவுனியா பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்த மக்கள் பல்வேறு சிரமத்திற்கு முகம் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சைட்டம் மருத்துவக்கல்லூரியை மூடக்கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரால் முன்னெடுக்கப்படும் மாவட்ட மட்டத்திலான எதிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலேயே வவுனியா மாவட்ட வைத்தியர்களும் பணிப்புறக்கனிப்பில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-100)

## மட்டுவில் சந்திரபுரத்தில் விழாக்கால சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 22

சாவகச்சேரி, மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரியையொட்டி விழாக்கலாச் சிறப்பு சொற்பொழிவுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை இளம் சைவப் புலவர் சைவ சின்மய எஸ்.ரி.குமரன் ‘விழாக்கள் உணர்த்தும் வாழ்வியல்’ என்ற தலைப்பிலும்-

நாளை சனிக்கிழமை சைவப்புலவர் சைவ சின்மயர் கா.கமலநாதன் ‘அன்பு நெறியும் அன்னை வழிபாடும்’ என்ற தலைப்பிலும் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவர்.

(உ)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், செப். 22

இணுவில் மருதனார்மடம் திருவெங்கடேஸ் வரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

# வவுனியா சிவபுரத்தில் நூல் நிலையம் திறப்பு!





வவுனியா, செப். 22

வவுனியா, சிவபுரம் பகுதியில் நூல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் குணபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் போது நேற்று இந்தப் பொது நூல் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வவுனியா தெற்கு வலய கோட்டக் கல்விப்பணிப்பாளர் எம். பி. நடராஜா, முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோதரலிங்கம், செக்கட்டிப்புலவு கிராம சேவையாளர் ஜே. அமலதாஸ், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கே. கே. மஸ்தான் மற்றும் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரின் இணைப்பாளர்கள், அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இணைப்பாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், மகளிர் அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டதுடன், மாணவர்களுக்கு வாசிப்பு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

பொதுநூல் நிலையத்தில் ஞாபகார்த்த மரக்கன்று ஒன்றினையும் நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள் நட்டு வைத்தார்கள்.

(க-100)

# மாந்தை சமுர்த்தி திட்டத்தில் பயனாளர்களின் பெயர்கள் நீக்கம்!

மன்னார், செப். 22

சமுர்த்தித் திட்டத்தின் மீளாய்வில் பலரின் பெயர்கள் நீக்கப்பட்டபோதும் மேலும் பலரின் பெயர்கள் உள்வாங்கப்பட்டுள்ளது என மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாந்தை பிரதேச செயலகப் பிரிவில் வழங்கப்பட்ட சமுர்த்தி திட்டத்தை மீளாய்வு செய்வதாக தெரிவித்து வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தில் கை வைக்காதீர் என்று அப்பகுதி மக்கள் போராட்டத்தில் இறங்கியதுடன் இதுவிடயமாக மகஜர்களும் கையளிக்கப்பட்டன.

மாந்தை பிரதேச செயலாளர் கேதீஸ்வரனிடம் மகஜர் கையளிக்கப்பட்டவேளையில் அவர்



மக்கள் மத்தியில் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தப் பகுதியில் 5 ஆயிரத்து 760 பேர்களின் பெயர்கள் சமுர்த்தி திட்டத்துக்கு சிபாரிசு செய்யப் பட்டுள்ளன. இதில் பலரின் பெயர்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. அதேநேரத்தில், புதியவர்களின் பெயர்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினை மாந்தை பிரதேசப் பகுதியில் மட்டுமல்ல பல்வேறுபட்ட இடங்களிலும் நிலவி வருகின்றது.

இருந்தபோதும் உங்களது நியாயமான கோரிக் கைகள் மாவட்ட அரசாங்க அதிபரூடாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-112)

# இலங்கையில் பிறந்த 11 ஆயிரம் குழந்தைகள் 80களில் ஐரோப்பிய நாடுகளுக்கு விற்பனை

## நெதர்லாந்து தொலைக்காட்சி அதிர்ச்சித் தகவல்

இலங்கையில் பிறந்த 11 ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் 1980 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஐரோப்பிய நாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டன எனத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நெதர்லாந்தின் தொலைக்காட்சி ஊடகம் ஒன்றினால் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளதாக பி.பி.சி. செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட குழந்தைகளில் சுமார் 6 ஆயிரம் குழந்தைகள் நெதர்லாந்தின் சுவீகாரப் பெற்றோர்களுடன் வாழ்ந்து வருகின்றன எனவும் அந்த தொலைக்காட்சி தனது ஆவணப் படம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் ஏனையவர்கள் சுவீடன், டென்மார்க், ஜேர்மன் மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர் எனவும் அந்தத் தொலைக்காட்சியை மேற்கோள்காட்டி பிபிசி தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் தாய்மார்களால் ஈன்றெடுக்கப்பட்ட இந்தக் குழந்தைகளை விற்பனை செய்வதற்கு போலியான ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தத் தகவலை வெளியிட்ட நெதர்லாந்து தொலைக்காட்சி நிறுவனத்திடம் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இது தொடர்பில் விளக்கம் கோரியுள்ளார்.

தற்போது இந்த நாடுகளில் வசித்து வரும் அவர்களின் இலங்கைப் பெற்றோரை அடையாளங் காண்பதற்கான ஒத்துழைப்பை வழங்கத் தயார் என நெதர்லாந்து தொலைக்காட்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் எதிர்காலத்தில் மரபணு ஆய்வு முறைமை ஒன்றை உருவாக்க எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குழந்தையின் பெற்றோர் மற்றும் குழந்தையைத் தத்தெடுப்பவர்கள் என இரு தரப்பினருமே தவறான தகவல்களை அளித்திருப்பதால், குழந்தைகளின் உண்மையான பெற்றோரைக் கண்டறிவதில் கடும் சிரமம் இருப்பதாகவும் அந்தப் படத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில், இம்மாதிரியான குழந்தைகள் பண்ணை ஒன்று முற்றுகையிடப்பட்டு இருபது குழந்தைகள் காப்பாற்றப்பட்டமையையடுத்து, 1987ஆம் ஆண்டு, இலங்கையில் பிறக்கும் குழந்தைகளை வெளிநாடுகளுக்குத் தத்துக் கொடுப்பது தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டது.

இவ்வாறான பண்ணைகளில், கர்ப்பிணிப் பெண்கள் சிறைச்சாலைகளுக்கு நிகரான பத்துக்குப் பத்து என்ற விஸ்தீரணம் கொண்ட அறைகளில் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மஹிந்த வீட்டுக்குள் கத்தியுடன் புகுந்த நபர் கைது

கொழும்பு, செப்.22

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்துக்குள் கத்தியொன்றுடன் பிரவேசிக்க முற்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்தேகநபர் பலாங்கொடையைச் சேர்ந்த ஒருவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# கொழும்பு கொம்பனித்தெரு மாடிக் கட்டடத்தில் அதிர்வு



கொழும்பு, செப்.22

கொம்பனித்தெரு பகுதியில் உள்ள மாடிக் கட்டடம் ஒன்றில் திடீரென ஏற்பட்ட அதிர்வின் காரணமாக அந்தக் கட்டடத்திலிருந்த மக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நேற்று ஏற்பட்ட இந்த அதிர்வு தொடர்பில் கொம்பனித்தெரு பொலிஸார் அனர்த்த மற்றும் கட்டட ஆராய்ச்சிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

அருகிலுள்ள பிரதேசத்தில் நடைபெறும் கட்டுமானப் பணியின் போது ஏற்படுத்தப்பட்ட அதிர்வின் காரணமாகவே இந்தக் கட்டடமும் அதிர்வுக்குள்ளாகியிருப்பதாக சம்பவம் தொடர்பில் ஆராய்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என அறியவந்தது. (உ)

# கல்வியங்காடு சந்தை தற்காலிக இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், செப்.22

நல்லூர், கல்வியங்காடு, செங்குந்தா சந்தை தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

"நல்லூர் கல்வியங்காடு செங்குந்தா சந்தையில் இயங்கும் மரக்கறிச் சந்தையும் மீன் சந்தையும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இதனால் நாளை 23 ஆம் திகதி முதல் அவை தற்காலிகமாக ஆடியபாதம் வீதியில் நாயன்மார்கட்டு சந்திக்கும் இடையில் (தற்போதைய சந்தையில் இருந்து 75 மீற்றர் தூரத்தில், இடம் மாற்றப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியத்துக்கு மனம் வருந்துகின்றோம்."- என்று உள்ளது. (உ)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் ஆட்சி முறைமை பற்றிய ஷரத்தில் தமிழில் 'ஒற்றையாட்சி' என்றோ ஆங்கிலத்தில் 'Unitary State' என்றோ குறிப்பிடப்படவில்லை. எனினும் சிங்களத்தில் "எக்கிய ராஜ்ய" என்று கூறப்பட்டுள்ளது. சிங்களத்தில் 'எக்கிய ராஜ்ய' என்பது ஒற்றையாட்சியையும் அதே சமயம் ஓர் அரசு என்பதையும் குறிக்கும்.

அதனால் சிங்களத்தில் 'எக்கிய ராஜ்ய' என்று குறிப்பிட்டு விட்டு அந்தச் சொல் 'பிளவுபடாத, பிரிக்கப்பட முடியாத ஒருமித்த நாடு' என்ற அர்த்தத்தையே அங்கு தருவதான விளக்கமும் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கை என்பது 'மத்திய, மாகாண நிறுவனங்களின் கட்டமைப்பைக் கொண்ட, பிளவுபடாத, பிரிக்கமுடியாத ஒருமித்த நாடு' என்பதான அர்த்தமே இந்தத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கு அதிகளவிலான அதிகாரப் பகிர்வுக்கு பல கட்சிகளும் இந்த இடைக்கால அறிக்கையில் இணக்கம் தெரிவித்துள்ளன.

மாகாணங்களில் உள்ள அரச காணிகள் மாகாணங்களுக்குரியவை. எனினும் மத்திய அரசு தேவைப்பட்டால் அந்தக் காணிகளை எடுக்கலாம். ஆனால் அதற்கு மாகாண சபை இணங்காவிட்டால் அந்தப் பிரச்சினை முதலில் ஓர் இணக்க சபையிலும், அது சரிவராவிட்டால் அரசமைப்பு நீதிமன்றத்திலும் கையாளப்படும்.

எனினும், தேசியப்பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்குத் தேவையான காணியை மாகாண சபையின் இணக்கமின்றி மத்திய அரசு கையேற்கலாம். ஆனால் மாகாணசபை அதை ஆட்சேபித்தால் அந்த விடயம் அரசமைப்பு நீதிமன்றத்துக்குச் செல்லும்.

அரசமைப்பு நீதிமன்றம் தனியாக நிறுவப்படும். நாட்டின் சகல இனக் குழுமங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் – சட்டம் தெரிந்த – சிரேஷ்ட உறுப்பினர்கள் ஏழு பேர் குறிப்பிட்ட காலத்துக்கு இந்த அரசமைப்பு நீதிமன்றத்தில் நீதியாளர்களாக இருப்பர்.

அரசமைப்புக்குப் பொருள் கோடும் தனித்துவ அதிகாரமும் இந்த அரசமைப்பு நீதிமன்றத்துக்கே உரியதாகவிருக்கும்.

மாகாணங்களின் பிரதிநிதிகளைக் கொண்டதாக இரண்டாவது சபை (செனட்) நிறுவப்படும்.

மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் பின்னர் மீளப் பெறப்படாமலும், வெட்டிக் குறைக்கப்படாமலும் மத்திய அரசினால் பயன்படுத்தப்படாமலும் இருக்கின்றமையையும் உறுதி செய்வதற்கே இந்த இரண்டாவது சபை அமைக்கப்படுகின்றது எனக் கூறப்பட்டுள்ளது.

இணைப்புக் குறித்து இந்த இடைக்கால அறிக்கையில் தெளிவான வரையறை இல்லை.

ஒருதரப்பு இணைப்பு அவசியம் என்கிறது. இன்னொரு தரப்பு அதைக் கடுமையாக எதிர்க்கின்றது.

ஆனால் இடைக்கால அறிக்கையோ இணைப்புத் தொடர்பில் தற்போதுள்ள ஒழுங்குமுறை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுவதையே வரவேற்கின்றது.

இரண்டு, அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாகாணங்கள் இணைய விரும்பினால் அந்தந்த மாகாண மக்களின் முழு அனுமதியுடன் அதைச் செய்யலாம் என்ற ஏற்பாடு தொடர்வதையே இடைக்கால அறிக்கை பரிந்துரைக்கின்றது.

பொலிஸ் அதிகாரப் பகிர்வு குறித்து இந்த இடைக்கால அறிக்கையில் ஏதுமில்லை.

ஏற்கனவே, இது தொடர்பில் வழிகாட்டல் குழுவின் உபகுழு அறிக்கை வெளியாகியுள்ளது. அதில் பொலிஸ் அதிகாரங்கள் பரவலாக்கப்படும் முறைமை தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் அந்த விடயம் இப்போது இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. (உ)

# காணாமற்போனோர் அலுவலகத்தால் தமிழருக்கு எந்த அனுகூலமும் இல்லை

## கூட்டமைப்புடன் கூறுகின்றார் சுரேஷ் எம்.பி.



காணாமற் போனோர் அலுவலகத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு எந்தவிதமான குறிப்பிடத்தக்க அனுகூலங்களும் கிடைக்கப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அலுவலகத்தை அரசாங்கம் நினைத்திருந்தால் உடனடியாக நியமித்திருக்க முடியும்.

தற்போது ஜெனீவா மனித உரிமைகள் மாநாடு இடம்பெறுகின்ற நிலையிலேயே இந்த அலுவலகத்தை உருவாக்குவதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்த அலுவலகத்தின் கிளைகள் எப்போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உருவாக்கப்படும் என்பது தெரியவில்லை.

எவ்வாறாயினும் இந்த அலுவலகம் காணாமற் போனவர்களின் பெயர் விவரங்களைப் பதிவு செய்து, அவர்களுக்கான காணாமற் போனவர்கள் சான்றிதழை வழங்கும் பணிகளை மாத்திரமே செய்யவுள்ளது.

இது காணாமற் போனவர்கள் குறித்த விசாரணைகளை எதனையும் நடத்தாது. எனவே இதன் ஊடாக குறிப்பிடத்தக்க அனுகூலங்கள் எவையும் கிடைக்கப் போவதில்லை. – என்று சுரேஷ் பிரேமசந்திரன் குறிப்பிட்டுள்ளார். (உ)

# மத்திய அரசு நிதி விடுவிக்க பின்னடிப்பு; வடக்கு முதலமைச்சர் பெரும் விசனம்

கொழும்பு, செப்.22

வடமாகாணசபை ஒதுக்கப்படுகின்ற நிதியைத் திருப்பியனுப்புவதான குற்றச்சாட்டுக்களின் மத்தியினில் எட்டாம் மாதம் கடந்துள்ள நிலையினில் மத்திய அரசு ஏற்கனவே உறுதியளித்ததில் வெறும் 50 சதவீதத்திற்கும் குறைவானதையே விடுவித்திருப்பதாக வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டினில் மத்திய அரசு வழங்குவதாகத் தெரிவித்த 351 கோடி ரூபா நிதியில் இதுவரை 167 கோடி ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மத்திய அரசின் நிதியமைச்சர் மங்கள சமரவீரவிற்கு முதலமைச்சர் கடிதமெழுதியுள்ளார். அவசரமாக ஐம்பது கோடி ரூபா நிதியை விடுவித்துதவுமாறும் அவர் கோரியுள்ளார்.

வடமாகாணசபை மத்திய அரசினால் ஒதுக்கப்படுகின்ற நிதியைச் செலவீனம் செய்யவில்லையென்ற குற்றச்சாட்டுக்களை முதலமைச்சர் அலுவலகம் தொடர்ந்தும் மறுத்தேவருகின்றது.

இந்நிலையினில் வருடத்தின் இறுதிக்காலாண்டு அண்மித்துள்ள நிலையில் இதுவரை மத்திய அரசு ஒதுக்கப்பட்ட நிதியில் 50 சதவீதத்தை கூட விடுவிக்காதுள்ளமை அம்பலமாகியுள்ளது.

வடமாகாணசபையினில் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக தொடர அவசரமாக ஐம்பது கோடி ரூபா நிதியை ஒதுக்கித்தந்துதவுமாறு முதலமைச்சர் இலங்கை நிதி அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kālaikkathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இடைக்கால அறிக்கையில் உள்ளார்ந்த அம்சங்கள்

நீண்ட இழுபறிக்குப் பின்னர் புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை வெளியே வந்துவிட்டது.

அது தொடர்பான வழிகாட்டல் குழு எழுபத்தியைந்துக்கும் அதிகமான தடைவைகள் கூடி, பலத்த வாதப் பிரதிவாதங்களை நடத்தித் தயாரித்த அறிக்கை இது.

இனி, அரசமைப்புப் பேரவையாக மாறியுள்ள நாடாளுமன்றம் இதிலிருந்து அரசமைப்புக்கான ஒரு நகல் வடிவத்தைத் தயாரிக்க வேண்டும்.

அதற்கு எவ்வளவு நாள்கள் செல்லும், என்னென்ன இழுபறிகள் உருவாகும், இதற்கு அப்பால் விடயங்கள் நகருமா என்பவை எல்லாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயங்கள்தாம்.

நாட்டின் ஆட்சிமுறைமை யாது என்ற அடிப்படைப் பிரச்சினையிலேயே விவகாரம் இழுபட்டு, புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி சின்னாபின்னமாகித் தொலைந்து விடுமோ என்ற அச்சம் இன்னும் தொடர்கின்றது.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு சரிவராது, சமஷ்டிதான் ஒரே வழி என்கின்றது தமிழர் தரப்பு.

ஒற்றையாட்சியை விட்டுக் கொடுக்க முடியாது, சமஷ்டி என்றால் நாடு துண்டுபட்டுப் பிளந்து விடும் எனத் துடிக்கின்றன தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாத சக்திகள்.

இவற்றுக்கு இடையே ஒரு சமாளிப்பு ஏற்பாட்டுடனான ஆலோசனையுடன் வெளிவந்திருக்கின்றது இடைக்கால அறிக்கை.

தமிழில் ஒற்றையாட்சி என்பது ஆங்கிலத்தில் Unitary State. அதுவே சிங்களத்தில் 'எக்கிய ராஜ்ய' என்று கூறப்படுகின்றது. ஆனால் சிங்களத்தில் 'எக்கிய ராஜ்ய' என்ற சொல் ஒற்றையாட்சியைக் குறித்தாலும் அதற்கு 'ஐக்கியமான' அல்லது 'ஒரே நாடு' என்ற அர்த்தமும் உண்டு. இதனை வைத்துக் கொண்டுதான் மேற்படி இரண்டு தரப்புகளுக்கும் இடையில் ஒரு சமரச நிலைப்பாட்டை ஏற்படுத்த முயன்றிருக்கின்றது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நடவடிக்கைக் குழு.

அதன்படி -

நாட்டின் ஆட்சிமுறை என்பதற்கு ஆங்கிலத்தில் Unitary State என்றோ, தமிழில் ஒற்றையாட்சி முறைமை என்றோ பதங்கள் ஏதும் இருக்காக அதற்குப் பதிலாக 'பிளவுபடாத', 'பிரிக்கப்பட முடியாத ஒருமித்த நாடு' என்ற முறைமை பற்றி அந்தந்த மொழிகளில் குறிக்கப்பட்டிருக்கும்.

எனினும் சிங்களத்தில் 'எக்கிய ராஜ்ய' என்ற சொல் இருக்கும். ஆனால் அது, 'பிளவுபடாத, பிரிக்கப்பட முடியாத ஒருமித்த நாடு' என்பதையே குறிக்கும் என்ற விளக்கமும் அதனோடு சேர்த்து கூடுதலாக சிங்களத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இதுதான் இடைக்கால அறிக்கை முன்வைத்துள்ள சமரசத் திட்டம்.

அதேசமயம், மாகாணங்களுக்கு அதி உச்ச அதிகாரப் பகிர்வு பற்றியும் இடைக்கால அறிக்கை பிரஸ்தாபித்துள்ளது. இந்த முடிவைக் கோட்பாட்டு ரீதியிலும் தாங்கள் ஏற்றுக்கொள்கின்றனர் என்பதை நேற்றைய அரசமைப்புப் பேரவை அமர்வின்போது, அதற்கான நடவடிக்கைக் குழுவில் சு.க. பிரதிநிதியாகப் பங்குபற்றிய சிரேஷ்ட அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவே சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அடுத்து, நாடாளுமன்றத்துக்கு மேலதிகமாக இரண்டாவது சபை - அல்லது செனட் - அமைக்கும் யோசனையாகும்.

இந்தச் சபை மாகாணங்களின் பிரதிநிதிகளைக் கொண்டதாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மாகாணங்களுக்குக் குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை - அதிகாரங்களை - மத்திய அரசு எதிர்காலத்தில் மீளப்பெற்று அல்லது வெட்டிக் குறைத்து அல்லது தான் பிரயோகித்துக் கொள்வதைத் தடுப்பதற்கான பொறிமுறையாக இந்தத் திட்டம் உள்நுழைக்கப்பட்டுள்ளது.

தவிரவும் சர்ச்சைக்குரிய இணைப்புப் பற்றியும் இடைக்கால அறிக்கை பிரஸ்தாபித்துள்ளது. குறிப்பாக இரண்டு விதமான எதிரெதிர் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மாகாணங்கள் இணைக்கப்படவே கூடாது என்பது ஒரு யோசனை. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்திருக்க வேண்டும் என்பது மற்றைய யோசனை.

ஆனால் இடைக்கால அறிக்கை இந்த இரண்டையும் விடுத்து, மூன்றாவது பரிந்துரை ஒன்றைச் செய்திருக்கின்றது.

அதாவது, மாகாணங்கள் இப்போதைய நிலையிலேயே இருக்கலாம். ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்கள் இணைய வேண்டுமானால் அந்தந்த மாகாணங்களில் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அந்த மக்களின் முடிவை அறிந்தே அதைச் செயற்படுத்த முடியும் என்ற சிபாரிசே அது.

இந்த இடைக்கால அறிக்கையுடன் புதிய அரசமைப்பு உருவாக்கல் யோசனை இடைத்தங்கல் கொண்டு விடுமா, அல்லது தொடர்ந்து அது ஆக்கபூர்வமான திசையில் முன்னெடுக்கப்படுமா என்பதற்கும் காலம்தான் பதில் கூறவேண்டியிருக்கும்.

# அமெரிக்கா — இலங்கை இராணுவத் தளபதிகள் சந்திப்பு



கொழும்பு, செப். 22

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராணுவத் தளபதி ஜெனரல் மார்க்ஏமில்லேயுடன், இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க சந்தித்துள்ளார்.

இரண்டு நாடுகளின் இராணுவத் தளபதிகளுக்கும் இடையில் முக்கியமான இராஜதந்திர ரீதியான பேச்சுக்கள் இடம்பெற்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தென்கொரியாவின் சியோல் நகரில் நடந்து வரும், பசுபிக் இராணுவத் தளபதிகள் மாநாட்டின் பக்க நிகழ்வாக- நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது போர் அனுபவங்கள் தொடர்பாக இரண்டு நாடுகளின் தளபதிகளும் கலந்துரையாடியுள்ளனர்.

அதேவேளை, அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் கட் டளைத் தளபதியான ஜெனரல் றொபேர்ட் புரூக்ஸ்பிரவுனையும் இலங்கை இராணுவத் தளபதி சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, கடந்த கால போர் அனுபவங்கள் மற்றும் இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த, ஆர்வமுள்ள விவகாரங்கள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

# வடமாகாண ஆய்வரங்கு, பண்பாட்டு பெருவிழா மூன்று நாள்கள் தெல்லிப்பழை யூனியனில்!

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சால் நடத்தப்படும் வடக்கு மாகாணப் பண்பாட்டு பெருவிழா மற்றும் 'கிராமிய பண்பாடும் மேம்பாடும்' என்ற ஆய்வரங்கம் என்பன இன்று வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் காலை, மாலை அமர்வுகளாக நடைபெற உள்ளன.

முதலாம் நாள் நிகழ்வுகளில் ஆய்வரங்கம் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் கல்வயல் வே.குமாரசுவாமி அரங்கில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்தை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவிகள் வழங்குவர்.

வரவேற்புரையை கோப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் இ.ஜோன்சனும், அரங்கத் திறப்புரையை கவிஞர் சோ.பத்மநாதனும், ''கிராமியப் பண்பாடும் மேம்பாடும் மொழியும் இலக்கியமும்'' என்னும் ஆய்வரங்க வரிசையில், ''பண்பாட்டு மொழி வழங்கும் இன்றைய நிலையும் சமுதாய மொழியியல் ஆய்வும்'' என்னும் தலைப்பில் செல்வி கவிதா சதாசிவமும், ''சிறுபஞ்சமூலத்தில் பெண்கள் தொடர்பான குறிப்புக்கள்'' யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறையைச் சேர்ந்த செல்வி க.துஷாந்தினி, ''வடமராட்சியின் பண்பாட்டை வெளிப்படுத்தும் சிறுகதைகள்'' கரவெட்டி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் த.அஜந்தகுமாரும் ''வட இலங்கையில் நாக மனிதர்கள் ஒரு சுருக்கமான அறிமுகம்'' களனி பல்கலைக்கழக மொழியியற்றுறை விரிவுரையாளர் சி.கேசவனும், ''கிளிநொச்சி மாவட்டத்தில் போருக்குப் பின்னரான பண்பாட்டு வளர்ச்சியில் கிறிஸ்தவ தேவாலயங்களின் பங்களிப்பு - ஓர் ஆய்வு'' பளை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உதவியாளர் திருமதி அ.அன்பரசி, ''இந்துக்களின் ஆன்மீக, சமூக மேம்பாட்டில் ஆகம கிராமிய மரபுகளின் பங்களிப்பு'' கல்லடி, நொச்சிமுனை இசை நடனக் கல்லூரியைச் சேர்ந்த செ.கமலநாதனும் வழங்குவர்.

நன்றியுரையை உடுவில் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி நரேந்திராவும் தமிழ்மொழி வாழ்த்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களும் வழங்குவர்.

பண்பாட்டுப் பெருவிழா மாலை நிகழ்வுகள் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலா வினோதன் நாகலிங்கம் கணபதிப்பிள்ளை (சின்னமணி) அரங்கில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனும், வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசாவும், சிறப்பு விருந்தினராக இசைவாணர் முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணனும் கலந்துகொள்வர்.

விருந்தினர்களை வரவேற்றல், மங்கல விளக்கேற்றல், தமிழ்த் தாய்க்கு மாலை அணிவித்தல் ஆகிய நிகழ்வுகளுடன் ஆரம்பமாகும் விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் வழங்குவர்.

மங்கள இசையை மல்லாகம் இ.இந்திரகுமார் குழுவினரும், வரவேற்பு நடனத்தை கோப்பாய் கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களும் வழங்குவர்.

வரவேற்புரையை தெல்லிப்பழை பிரதேச செயலர் ச.சிவஸ்ரீயும் அரங்கத் திறப்புரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும், கிராமியக் கலைக் கதம்ப நிகழ்வை கற்சிலைமடு இளங் கலைஞர் மன்றமும் -

குழு நடன நிகழ்வை நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையும், கிராமிய இசையை நல்லூர் தயாபரன் குழுவினரும் குழு நடன நிகழ்வை பொன்னாலை சந்திர பரத கலாலயத்தினரும், சண்முகாஞ்சலி இணுவில் குமர நர்த்தனாலய மாணவர்களும் வழங்குவர்.

தொடர்ந்து பரிசில் வழங்கல் நிகழ்வும், மாகாண அரச ஊழியர்களுக்கிடையிலானபோட்டி, மாகாணக் கலை மன்றங்களுக்கிடையிலான போட்டி என்பனவும், மாதகல் புக்கைப் புலோநகர் கலா மன்றத்தினர் வழங்கும் பாம்பு நடனமும், வவுனியா நிருத்திய நிகேதனன் நுண்கலைக் கல்லூரியினர் வழங்கும் நாட்டிய நாடகமும், யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தினர் வழங்கும் 'யாழ்பாணர்' என்ற இசை நாடகமும் நடைபெறும்.

நன்றியுரையை தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி சி.பம்மரானியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்களின் தமிழ்மொழி வாழ்த்துடன் நிகழ்வுகள் நிறைவுறும்.

### நாளை

23.09.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : சுவாதி பி.இ.3.35 வரை
திதி: திருதியை மு.ப. 11.55 வரை
சுபநேரம் : 03.02 – 04.32
இராகுகாலம் : 09.02 – 10.32

# இந்தியா எமது மூத்த சகோதரன் என்கிறார் அமரபுர பீட மகாநாயக்கர் தம்மவன்ச தேரர்!



தெற்காசியக் குடும்பத்தில் இந்தியா எமது மூத்த சகோதரன் போல இருக்கிறது என்று இலங்கையின் இரண்டாவது சக்திவாய்ந்த பௌத்த பீடமான அமரபுர மகாநிக்காயவின் மகாநாயக்கரான வண. கொட்டுகொட தம்மவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாகிஸ்தான், மாலைதீவு, இலங்கை, நேபாளம் போன்ற நாடுகளை உள்ளடக்கிய தெற்காசியக் குடும்பத்தில் இந்தியா எமது மூத்த சகோதரன். அவர்கள் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படை யில் அனைவரும் ஒன்றாக பணியாற்ற வேண்டும்.

பிராந்தியத்தில் அமைதியை கட்டியெழுப்ப இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும், இணைந்து மிகச் சிறப்பாகப் பணியாற்ற இலங்கை முயற்சிக்க வேண்டும்.

இந்திய- இலங்கை உறவுகள் மிகமிகப் பழைமை வாய்ந்தவை. வரலாற்று ரீதியானது. இந்த உறவுகளை நாங்கள் சேதப்படுத்துவதற்கு எதையும் செய்து விடக் கூடாது.

வடஇந்திய இளவரசனான விஜயன் தான், சிங்கள நாகரிகத்தை உருவாக்கினார் என்பதை புதிய தலைமுறையினர் நினைவில் கொள்ள வேண்டும்.

அதுபோல தமிழர்களும் இந்தியாவில் இருந்தே வந்தனர். முஸ்லிம்களும் இந்தியா ஊடாகவே வியாபார நோக்கமாக இலங்கைத் தீவுக்கு வந்தனர்.

எமது தேசிய மதமான பௌத்தம் இந்தியாவில் இருந்தே வந்தது. எமது கலாசாரம், எமது எழுத்துவடிவங்கள், எமது பெயர்கள் கூட இந்தியாவில் இருந்தே வந்தன.

இந்தக் காரணங்களால், இந்தியா இல்லாமல் நிற்கவோ, அல்லது அதன் உறவுகளை காயப்படுத்தவோ முடியாது. எனது ஆரம்ப காலத்தை நினைத்துப் பார்க்கிறேன், வடக்கில் உள்ள சிறுவர்கள் படம் பார்ப்பதற்கு சென்னைக்கு நீந்திச் சென்றார்கள்.

சீனாவுடன் நாங்கள் நீண்ட உறவுகளைக் கொண்டிருக்கிறோம். இந்தியா எமது உறவினராக இருக்கும் போது, சீனா ஒரு நண்பனாக இருக்கிறது. இரண்டு சமூகங் களுக்கும் இடையில் பௌத்தம் மூலம், தொடர்புகள் ஆரம்பித்தன.

பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற்று உலகின் செல்வந்த நாடுகளில் ஒன்றாக வளர்ந்திருக்கிறது.

கடந்த காலத்தில் எமக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்ட போது, எம்மை மீட்க வந்தார்கள். இந்தியாவினால் அப்போது அதிகம் செய்ய முடியாதிருந்தது.

லருங்காரில் பௌத்த இடங்களை அழித்த சீன அதிகாரிகளை நான் கண்டிக்கிறேன். ஆனால், பெரும்பாலான இலங்கையர்கள் சீனாவை நண்பனாக உணர்கின்றனர்.

அவர்கள் எமது நண்பனாக இருந்தாலும், அம்பாந்தோட்டைதுறைமுக நிலத்தை சீனாவுக்கு வழங்குவதை நாம் எதிர்க்கிறோம்.

நாம் மட்டுமல்ல ஒட்டுமொத்த நாடுமே, அரசின் இந்த முடிவை எதிர்க்கிறது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வளலாய் சுற்றுலா தளத்தை அகற்றக் கோரி போராட்டம்!

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணம் - தொண்டமானாறு - வளலாய் பகுதியில் உள்ள சுற்றுலா தளத்தை அகற்றுமாறு கோரி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் பிரதேச மக்களினால் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் - தொண்டைமானாறு - வளலாய் பகுதியில் உள்ள கடற்கரைப் பகுதியில் பிரதேச சபையினால் சுற்றுலா தளம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றுலா தளத்திற்கு அதிகளவான மக்கள் சென்று வருகின்றனர்.

இருப்பினும் வளலாய் பகுதியில் உள்ள சுற்றுலா தளத்தினால் சமூகச் சீர்கேடு இடம்பெறுவதாகத் தெரிவிக்கும் பிரதேச மக்கள் அந்த சுற்றுலா தளத்தை அகற்றுமாறு கோரியுள்ளனர்.

சுற்றுலா தளத்தை அகற்றுமாறு கோரி பல மாதங்களாக தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்த பிரதேச மக்கள் இன்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் அதிகாரிகள் மட்டப் பேச்சு ஆரம்பித்தது இலங்கைக் கடற்படை!

கொழும்பு, செப். 22

இலங்கை- பாகிஸ்தான் கடற்படைகளுக்கு இடையிலான அதிகாரிகள் மட்டப் பேச்சுக்கள், இலங்கைக் கடற்படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றன.





இலங்கைக் கடற்படையின் நடவடிக்கை பணிப்பாளர் றியர் அட்மிரல் பியால் டி சில்வா தலைமையிலான 10 கடற்படை அதிகாரிகள் இலங்கை தரப்பில் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றனர்.

கொமடோர் மசூத் குர்ஷித் தலைமையிலான 5 கடற்படை அதிகாரிகள் பாகிஸ்தான் தரப்பில் இடம்பெற்றிருந்தனர்.

கள நடவடிக்கை ஒத்துழைப்பு, பயிற்சி, இராணுவ பரிமாற்றங்கள், பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட துறைகளில் கடற்படைகளுக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்வது குறித்து இந்தப் பேச்சுகளில் கலந்துரையாடப்பட்டது.

இதுபோன்ற கலந்துரையாடலை ஆண்டு தோறும் நடத்தவும், அடுத்த ஆண்டு பாகிஸ்தானில் பேச்சுகளை நடத்தவும் இந்தச் சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டது.

இலங்கைக் கடற்படை இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் இது போன்ற கலந்துரையாடல்களை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை மரைன் படைப்பிரிவுக்கு அமெ. கொமாண்டோக்கள் பயிற்சி!





கொழும்பு, செப். 22

இலங்கைக் கடற்படையின் மரைன் படைப்பிரிவினருக்கு, அமெரிக்காவின் மரைன் படைப்பிரிவின் அதிகாரிகள் பயிற்சி அளித்து வருகின்றனர். வெலிசறை கடற்படைத் தளத்தில் இந்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இலங்கைக்கடற்படையின் மரைன் படைப்பிரிவினருக்கு, மருத்துவ பயிற்சிகளை அமெரிக்க மரைன் படைப்பிரிவு அதிகாரிகள் அளித்து வருகின் றனர்.

இலங்கைக் கடற்படையின் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மரைன் படைப்பிரிவுக்கு அமெரிக்க மரைன் கொமாண்டோக்கள் தொடர்ச்சியாகப் பயிற்சிகளை அளித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டு. மாநகர சபை ஊழியர் மீது தாக்கு; திருப்பெருந்துறையில் முறுகல் நிலை!




மட்டக்களப்பு, செப்.22

மட்டக்களப்பு - திருப்பெருந்துறையில் பொது மக்களுக்கும், மாநகர சபை ஊழியர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதை அடுத்து அந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் திண்ம கழிவுகளை கொட்டுவதற்கு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் விதித்த தடை உத்தரவை, மேல் நீதிமன்றம் நீக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பை தங்களது பார்வைக்கு இதுவரை காண்பிக்கவில்லை என தெரிவித்த திருப்பெருந்துறை மக்கள், மாநகர சபையின் கழிவு வண்டிகளைமறித்துதமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

நீதிமன்றத்தின் உத்தரவை தமக்கு காண்பிக்கும் வரை குப்பைகளை கொட்ட விட மாட்டோம் எனத் தெரிவித்து அந்த பகுதி மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன், மாநகர சபை ஊழியர் ஒருவர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன் காரணமாக அந்த பகுதியில் பதற்றமான நிலை ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 33 தமிழர்கள் படுகொலையின் 27 ஆவது ஆண்டு நினைவேந்தல்!

மட்டக்களப்பு, செப். 22

மட்டக்களப்பு - சவுக்கடி கிராமத்தில் 33 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் 27ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

சவுக்கடியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது தன்னாமுனை புனித சூசையப்பர் தேவாலய அருட்தந்தை ரமேஷ் கிறிஸ்டி தலைமையில் விசேட பிரார்த்தனை மற்றும் இரங்கல் கூட்டமும் நடைபெற்றது.

கடந்த 1990ஆம் ஆண்டு சவுக்கடி மற்றும் ஆறுமுகத்தான் குடியிருப்பு கிராமங்களைச் சேர்ந்த 33 தமிழர்கள் இராணுவ சீருடை தரித்த வர்களினால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்று 27 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலேயே இந்த நினைவேந்தல் இடம்பெற்றுள்ளது.

(க)



## ஆரையம்பதியில் விபத்து!

மட்டக்களப்பு, செப். 22

கம்பஹாவில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த அஸ்டா நிறுவனத்திற்கு சொந்தமான லொறி ஒன்று தனது கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம், மட்டக்களப்பு- ஆரையம்பதி, மக்கள் வங்கி அருகே இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மின் கம்பங்கள் சேதமானதுடன் மக்கள் வங்கி வாடிக்கையாளர் ஒருவரது, நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார்சைக்கிள் ஒன்றும் முழுமையாகச் சேதமடைந்து உள்ளது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிழக்கில் 144 பாடசாலைகளுக்கு நவீன வசதியுடன் கழிப்பறைகள்!

மட்டக்களப்பு, செப். 22

கிழக்கு மாகாணத்தில் 144 பாடசாலைகளில் நவீன சுகாதார வசதிகளுடன் கூடிய கழிப்பறைகளை அமைக்கும் திட்டத்திற்கு கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கம் வரவேற்பளித்துள்ளது.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி கிழக்கு மாகாணத்தில் கழிவறைகள் குறைபாடுகள் உள்ள பாடசாலைகளுக்கு நவீன சுகாதார வசதிகளைக் கொண்ட கழிப்பறைகளை நிர்மாணித்துக் கொள்வதற்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த வேலைத் திட்டம் சமகாலத் தேவை கருதி மேற்கொள்ளப் பட்ட முயற்சியாகும் என கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண கல்வி நிலைமையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் பல்வேறு நேரடி மற்றும் மறைமுக வேலைத் திட்டங்களை தாம் வரவேற்பதாகவும் அச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் சிவக்கொழுந்து ஜெயராஜா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் பாடசாலைகளுக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதும் கல்வி மறுசீரமைப்பில் முக்கியமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

கல்வியில் கிழக்கு மாகாணம் பின்தங்கியமைக்கு பல்வேறு நேரடி மற்றும் மறைமுக காரணங்கள் தாக்கம் செலுத்துகின்றன.

அந்த வகையில் வசதியீனங்கள் வரிசையில் குடிநீர், கழிப்பறை ஏற்பாடுகளும் உள்ளடங்கும்.

குறிப்பாக, மாணவிகளின் அசௌகரியங்களைப் போக்குவதற்கு நவீன மலசல கூட ஏற்பாடுகள் பெருந்துணை புரியும். இதனால், உடற் சோர்வு, மனச்சோர்வு, அசௌகரியம் என்பனவற்றைப் போக்கிக் கொள்ள வழியேற்படும்.

கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பறை வசதிகளை ஏற்படுத்துவதற்கென மத்திய கல்வியமைச்சினால் 23 கோடியே 80 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் கழிப்பறை வசதிக் குறைபாடுள்ள, தெரிவு செய்யப்பட்ட 144 பாடசாலைகளில் அடுத்து வரும் இரண்டு மாதங்களுக்குள் நவீன கழிப்பறை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு விடும் எனும் விடயம் மகிழ்ச்சியளிப்பதாய் உள்ளது.

கிழக்கின் பாடசாலைகளில் கழிப்பறைகள் இன்மையால், அல்லது பாவனைக்கு உகந்த சுகாதார வசதிகளோடு மலசல கூடங்கள் இல்லாதமையால் பல மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதையே நிறுத்தி இடை விலகுகின்ற நிலைமையும் கடந்த காலங்களில் இருந்து வந்தது.

இவற்றை நிவர்த்தி செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சியால் கிழக்கு மாகாண மாணவர்களும் ஆசிரியர்களும் பெரிதும் நன்மையடைவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க)

## படகு கவிழ்ந்து ஒருவர் பலி!

மட்டக்களப்பு, செப். 22

அம்பாறை, ஒலுவில் கடலில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மீன் பிடிக்கச் சென்ற ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

ஒலுவில் 4 ஆம் பிரிவைச் சேர்ந்த சம்சுதீன் பஸீல் (வயது 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம், அக்கரைப்பற்று வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கு அச்சுறுத்தல்; இலங்கைக்கு ஐ.நா. உதவிச் செயலர் கண்டனம்!

கொழும்பு, செப். 21
சிவில் சமூகப் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர் என இலங்கை மீது மனித உரிமைகளுக்கான ஐ.நாவின் உதவிச்செயலர் அன்ட்ரூ கில்மோர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜெனீவாவில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் இலங்கைச் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்பட்ட செய்தி தம்மைக் குழப்பத்தில் ஆழ்த்தியது என கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது உரையில் கூறியிருந்தார். அவர் இந்த விவகாரத்தை உதவிச் செயலருக்கு அனுப்பியிருந்தார்.

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது அமர்வில் கலந்துகொண்ட எஸ்.கணேசநாதன் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பாக ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்களும் விசாரித்திருந்தனர்.




இந்தநிலையில், மனித உரிமைகளுக்கான ஐ.நாவின் உதவிச்செயலர் அன்ட்ரூ கில்மோர் நேற்றுமுன்தினம் இது தொடர்பான அறிக்கையை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

2017 மார்ச் 7 - 9 ஆம் திகதிகளுக்கிடையில் இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பாக கணேசநாதன் உரையாற்றியிருந்தார்.

2017 மார்ச் 11ஆம் திகதி கல்முனை காவல் நிலையத்தைச் சேர்ந்த குற்றப் புலனாய்வுப்பிரிவினர், கணேசநாதனின் வீட்டுக்குச் சென்று, அவரது உறவினர்களைமிரட்டியுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது அமர்வில் கணேசநாதன் கலந்துகொண்டமையால், அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பாக, நிபுணர்கள் தீவிர கரிசனை வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் நேரம் வரையில், இலங்கை அரசிடம் இருந்து எந்த அறிக்கையும் கிடைக்கவில்லை.

மனித உரிமைகள் தொடர்பாக ஐ.நாவுடன் ஒத்துழைக்கின்ற மனித உரிமை ஆர்வலர்கள் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றமை உலகெங்கும் அதிகரித்து வருகிறது.

பயணத் தடைகள், சொத்துக்கள் முடக்கம், தடுத்துவைப்பு, சித்திரவதைகள் போன்ற மிரட்டல்கள், அச்சுறுத்தல்களைத்தனிநபர்களும், குழுக்களும் சந்தித்துள்ளனர்.

இதுவெளிப்படையாகவெறுக்கத்தக்க செயல். ஒவ்வோர் ஆண்டும், இத்தகைய மிரட்டல்கள் தொடர்பாக அறிக்கைகளைச் சமர்ப்பிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். அந்தந்த அரசுகள், ஐ.நா நிறுவனங்களுடனும், பொறிமுறைகளுடனும் ஒத்துழைக்க வேண்டும்.

மக்கள், உரிமை, கௌரவத்துக்கு எதிரான இந்த நச்சுப் பின்னணியை மௌனமாக பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இத்தகைய அச்சுறுத்தல்கள் அதிகரித்து வரும் நிலையில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இன்னமும் விரிவான அணுகுமுறை அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமை ஆர்வலர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும்நாடுகளின்பட்டியலையும் அவர் வெளியிட்டுள்ளார். அதில் இலங்கை மற்றும் அல்ஜீரியா, பஹ்ரெய்ன், புரூண்டி, சீனா, கியூபா, எகிப்து, எரித்ரியா, ஹொண்டுரோஸ், இந்தியா, இஸ்ரேல், ஈரான், மொரிட்டானியா, மெக்சிகோ, மொராக்கோ, மியான்மார், ஓமான், தாய் லாந்து, பாகிஸ்தான், ருவான்டா, சவூதி அரேபியா, தென் சூடான், சூடான், தஜிகிஸ்தான், துருக்கி, துர்க்மெனிஸ்தான் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், உஸ்டபெகிஸ்தான், வெனிசுவேலா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

(க)

அனைத்து மாகாண சபைகளுக்குமான

## தேர்தலை இரண்டு கட்டமாக நடத்துக!

வலியுறுத்துகிறார் அநுர குமார திஸாநாயக்க



கொழும்பு, செப். 22
அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை இரண்டு கட்டங்களாக நடத்தி முடியுங்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலை மார்ச் மாதத்திற்குள் நடத்த வேண்டும். அதற்கு மாறாக எல்லை நிர்ணய காரணங்களைக் காட்டி தேர்தலைத் தாமதப்படுத்த முனையக் கூடாது எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஆட்சியின் போது ஊவா மாகாணத்திற்கு வேறாகவும், மத்திய, வட மேல் மாகாணத்திற்கு வேறாகவும் மேல், தென் மாகாணங்களுக்கு வேறாகவும் தேர்தலை நடத்தினர்.

இதன் காரணமாக அரச உடைமைகள் மற்றும் ஊடகங்களும் பயன்படுத்தப்பட்டன.

இதன்போது, அரசு முழுக் கவனத்தையும் செலுத்தி பல லட்சக் கணக்கில் ரூபாவை செலவிட்டது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(க)

## கிராமியப் பொருளாதாரத்தை பலப்படுத்த புதிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்



பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 22
நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அதிக பங்களிப்பைச் செய்யும் கிராமிய வியாபாரம் மற்றும் பொருளாதாரத்தைப் பலப்படுத்த அரசு புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் எனும் தொனிப் பொருளில் ஆசிய கடன் தொழிற்சங்க மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பில் ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் உரையாற்றிய போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் வளர்ச்சியிலும் அதன் பொருளாதார மேம்பாட்டிலும் அதன் மேல்மட்ட வர்க்க அபிவிருத்தியை மாத்திரமே கருத்தில் கொள்ளமுடியாது.

கடந்த காலங்களில் நாட்டின் ஒரு குறிப்பிட்ட நபர்களிடம் மாத்திரமே நிதி இருந்தது. அவர்களின் தலையீட்டில் மாத்திரமே எல்லாம் நடந்தது. எனினும் நாம் இன்று நாட்டின் கீழ் மட்ட பொருளாதார நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு அதற்கான முதலீடு களை ஊக்குவிக்கும் வகையில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

கிராமிய பொருளாதாரம் இந்த நாட்டின் பிரதான பங்கை வகிக்கின்ற போதிலும் அதனைக் கருத்திற்கொண்டு நாம் செயற்படுவதில்லை. எனினும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் இது பெரிய பங்களிப்பைச் செய்கின்றது.

அரச துறையை மாத்திரம் கருத்திற்கொண்டு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. அதேபோல் தனியார் துறையைக் கருத்திற்கொண்டும் எம்மால் பொருளாதாரத்தை பலப்படுத்த முடியாது.

இந்த இரண்டு துறைகளின் இணைந்த செயற்பாடுகள் மூலமே நாம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். அதேபோல் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை அதிகரித்தலும் அதன் மூலமான முதலீடுகளை அதிகரிப்பதுமே அவசியமானதாகும்.

இதில் பிரதான அங்கமான கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி அதன் மூலமாக நகருக்கான அபிவிருத்தியைக் கையாள்வதே எமது தேசிய அரசின் நோக்கமாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து கிராமிய அபிவிருத்தி திட்டத்தை உறுதியாக முன்னெடுத்து செல்ல புதிய கொள்கைகளை நாம் வகுத்து வருகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# முச்சக்கர வண்டிக்கு புதிய நடைமுறை!

இலங்கையில் பயணிகள் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் முச்சக்கர வண்டிகளுக்கு தனியான ஒரு நிறத்தை அறிமுகம் செய்ய வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தீர்மானித்துள்ளது.

அவ்வாறு செய்வதன் ஊடாக வாடகை முச்சக்கர வண்டியை இலகுவாக அடையாளம் காண முடியும் என அந்தச் சபையின் தலைவர், சிசர கொதாகொட தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த போக்குவரத்து வாகனங்களுக்கு பயன்படுத்தப்படும் நிறம் தொடர்பில், கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தீர்மானம் மேற்கொள்ளப்பட்டவுடன் நிறம் மாற்றப்படும்.

இதற்கு மேலதிகமாக நிறம் மாற்றப்பட்ட முச்சக்கர வண்டிகளுக்கு லட்சினை ஒன்றும் பயன்படுத்தப்படவுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் தற்போது 11 லட்சத்திற்கு அதிகமான முச்சக்கரவண்டிகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 9 லட்சம் முச்சக்கரவண்டிகள் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது

## தினசரி ராசி பலன் 22 .09.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதி திங்கள் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை. துவிதீயைத்திதி. பகல் 10.41 மணி வரை. பின்னர் திரிதியை. நட்சத்திரம் -அத்தம் இரவு 11.33 மணிவரை.பின்னர் சித்திரை இரவு 12.47 மணி வரை. பின்னர்- சுபயோகம்.* **ராகுகாலம்**- *மு.ப. 10.32மணி முதல் 12.03 மணி வரை.* **சுபநேரம்**- *பி.ப 06.03 மணி முதல் 07.33 மணி வரை.* **திவசம் செய்ய வேண்டிய திதி**- *புரட்டாதி மாத வளர்பிறை துவிதீயை.* **பிறந்த நட்சத்திர வழிபாடு:** *சித்திரை*

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** யோகமான நாள். தனலாபம் செல்வாக்கு அதிகரிக்கும். எதிர்பார்த்த வியாபார விருத்தி உண்டாகும். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

**ரிஷபம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. எடுத்த காரியத்தில் வெற்றியும் வியாபாரத்தில் நன்மை உண்டாகும். வெளிநாட்டு உற வினர்களின் தொடர்பாடல் மனமகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** துன்பமான நாள். பொருளாதார நெருக்கடி உண்டாகும். உத்தியோகத்தர் பணியாளர்களிடையே அனுசரணை இருப்பதால் குழப்பம் நீடிக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும்.

**கடகம் :** விருத்தியான நாள். பொருளாதார நிலை சீராகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை உருவாகும். மறதியும் கவனக்குறைவும் உண்டாகும்.

**சிம்மம்:** சுபீட்சமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். திருமணம் சம்பந்தமான பேச்சு வெற்றியைத் தரும். உறவினர் வீட்டுச் சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நேரும்.

**கன்னி :** அனுகூலமான நாள். நினைத்தவை நிறைவேறும். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப உறவு நெருக்கமாக அமையும். நண்பர்கள் பல வழிகளில் உதவி செய்வார்கள்.

**துலாம் :** அலைச்சல் மிகுந்த நாள். சுயதொழிலில் அலைச்சல்கள் அதிகரிக்கும். சிலர் அரசாங்க வேலை தேடித் திரிவார்கள். உடல் நலக் குறைவால் வைத்திய உதவியை நாடுவார்கள்.

**விருச்சிகம் :** அதிர்ஷ்டமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பெண்களுக்கு விருப்பமான இடங்களில் பணி புரியும் வாய்ப்புக் கிட்டும்.

**தனுசு :** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். தேகசுகம் குடும்ப சுகம் ஓரளவு சீராக இருக்கும். வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும்.

**மகரம்:** கீர்த்தியான நாள். பணம் சரளமாகப் புழங்கும். வியாபாரத்தில் புதிய முறைகளைக் கையாளுவீர்கள். தொழிலில் கடின உழைப்பும் வீண் அலைச்சல்களும் காணப்படும்.

**கும்பம் :** துயரமான நாள். பொருள் வளம் தொழில் வளம் குறைவடையும். குடும்பத்தில் பல பிரச்சினை காணப்படும். உறவினர் நண்பர்களால் தொல்லை அதிகரிக்கும்.

**மீனம் :** விருத்தியான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். உடல் நலனில் முன்னேற்றம் உண்டாகும். திருமணத் தடை நீங்கி வரன் அமையும்.

சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# இலங்கையில் நிலையான அமைதிக்கு இன்னும் அதிகம் செய்ய வேண்டும்!



## ஐ.நா. தூதுவர் கூறுகிறார்

கொழும்பு, செப். 22

இலங்கையில் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டிய தேவை உள்ளது என்று இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலி தெரிவித்துள்ளார்.

அமைதிக்கான சர்வதேச நாள் நேற்று கொண்டாடப்பட்டதையிட்டு தாம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் 21 ஆம் திகதியை அமைதிக்கான சர்வதேச நாளாக கொண்டாடுகிறோம். எல்லா நாடுகள், மற்றும் மக்களிடையே அமைதியை வலுப்படுத்துவதற்காக இந்த நாளை ஐ.நா. பொதுச்சபை பிரகடனப்படுத்தியுள்ளது.

இன்று, சர்வதேச சமூகம் என்ற வகையில், எமது கடமைகளை நினைவில் கொள்ள வேண்டும். வன்முறை மோதல்களும், பாகுபாடுகளும், மிகவும் பாதிப்புகளைத் தரக்கூடியன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த ஆண்டு, அமைதிக்காக இணைந்திருத்தல் - அனைருக்கும் மதிப்பளித்தல், பாதுகாப்பு மற்றும் கௌரவம் என்ற தொனிப் பொருளில் அமைந்துள்ளது.

குறிப்பாக, அகதிகளையும், குடியேற்றவாசிகளையும் கவனத்தில் கொள்கிறோம். அனைவரதும் மனித உரிமைகளை பாதுகாத்து, பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிரந்தரத் தீர்வைக் காண வேண்டும்.

மோதல்களுக்கான காரணிகளுக்குத் தீர்வு கண்டு, வன்முறைகளைத் தடுத்து, ஒற்றுமையை உறுதிப்படுத்த வேண்டியது எமது கடப் பாடாகும்.

இலங்கையில் போர் முடிந்து விட்டது. இன்னமும் வெறுப்பு மற்றும் பாகுபாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமைகள் உள்ளது.

நிலையான அமைதிக்காக அனைவரும் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்பு இன்னமும் உள்ளன.

அமைதியைக் கட்டியெழுப்புதல், மற்றும் நல்லிணக்கத்துக்கு இன்னமும் அதிகமாகச் செய்ய வேண்டியுள்ளது.

இதன் அர்த்தம், நாம் மற்றவரின் மதத்தை, இனத்தை, கலாசாரத்தை, பெறுமானத்தை, அரசியல் நம்பிக்கையை மதிக்க வேண்டும். அர்த்தமுள்ள முன்னேற்றங்களுக்காக, வேறுபாடுகளை மறந்து இணைந்து செயற்பட வேண்டும்.

பாகுபாடு, சகிப்பற்ற தன்மை மற்றும் சமத்துவமின்மை ஊக்குவிக்கப்படுதல் அல்லது அலட்சியம் செய்யப்படும் வரை, எங்களது முயற்சிகள் பயனற்றவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# நாளை மின் தடை

யாழ்ப்பாணம், செப்.22

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனி காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ் பிரதேசத்தில்** -

நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, பனைவள ஆராச்சி நிலையம், கைதடி யுனைரட் மோட்டர்ஸ், கைதடி வடமாகாண சபை அலுவலகம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்**-

கண்டி வீதி (A9 வீதி), 1ஆம் மற்றும் 2ஆம் குறுக்குத்தெரு, மதவுவைத்தகுளம், மூன்றுமுறிப்பு, தவசிக்குளம், குட்செட்றோட், தோணிக்கல், பண்டாரிக்குளம், ஈரப்பெரியகுளம், வேரகம, கற்குண்டமடு, அலுத்கம, அழகல்ல, பகல அழுத்வத்த, புபுதுகம, குருந்துப்பிட்டிய, பு-ஓயா படை முகாம், ஈரப்பெரியகுளம் படை முகாம், ஈரப்பெரியகுளம் SLBC, கார்கில்ஸ் புட் சிற்றி, மண்டெரின் ஆடைத்தொழிற்சாலை, Kowloom ஆடைத்தொழிற் சாலை,

குளோப் அரிசி ஆலை, விமானப்படை இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்**-

மன்னார் நகரம் ஒரு பகுதி, பள்ளிமுனை, மன்னார் நீர்ப் பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார்.

(இ)

# தென்மராட்சி கரையோரங்களில் இன்று துப்புரவுப் பணி

தென்மராட்சி, செப்.22

கரையோரப் பாதுகாப்புத் தினத்தையொட்டி தென்மராட்சிக் கரையோரப் பகுதிகளில் இன்று வெள்ளிக்கிழமை துப்புரவுப் பணிகள் இடம்பெறவுள்ளன என்று பிரதேச செயலர் திருமதி தே.பாபு அறிவித்துள்ளார்.

அந்தப் பிரதேச மக்களின் பங்களிப்புடன் நாவற்குழி, கைதடி, நாவற்குழி கோவிலாக்கண்டி, மறவன்புலோ, தனங்கிளப்பு, கச்சாய், கெற்பேலி ஆகிய பகுதிகளில் துப்புரவுப் பணிகள் இடம்பெறவுள்ளன.


பொது மக்களுடன் சாவகச்சேரி பிரதேச சபையினர், பிரதேசசெயலக அலுவலர்கள், சமுர்த்தி வங்கியினர் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்தப் பணியில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டம் வேள்ட்விசன்லங்கா நிறுவனத்தினரின் ரிபோஸ் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர்
Kalaikkathir







# அடியவர்களுக்கு அருளும் வண்ணை வேங்கடேசன்!

**இந்துமா சமுத்திரத்தின் சிரசென விளங்குகின்ற வடக்கே யாழ்ப்பாணத் திருநாட்டின் வைணவ மதத்தின் தலையாய ஆலயமாகத் திகழ்கின்ற யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளுக்கு இன்று கொடி. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.**

''மூவா இளமையுங் காட்டி முதுமை அழகுங் காட்டி காலந்தோறும் சிறந்து நிற்கும் ஒப்பற்ற மதமாம் இந்து மதம்'' என்று போற்றப்பட்ட இந்து மதத்தை - அதன் பேர், புகழ் வானளாவ ஓங்கும் வகை செய்தவர் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசங்கராச் சாரியார்.

இந்த இந்துமதத்தை ஆறு உப பிரிவுகளாக வகுத்தவரும் அவரே. சைவம், சாக்தம், காணாபத்தியம், வைணவம், கௌமாரம், சௌரம் என்று வகுத்தார் அவர்.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இந்து மதத்தவர்கள் தம் இஷ்ட தெய்வங்களை வழியாடியற்ற முடியாது அவதிப்பட்டார்கள். பகிரங்கமாக ஆலய வழிபாடியற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டார்கள். இந்து ஆலயங்கள் அனைத்தும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன.

அந்தநேரத்தில் வைரவர் வழிபாடு வீடுகளில் மேலோங்கிக் காணப்பட்டது. நீறுபூத்த நெருப்பாக அவர்களின் மனங்களில் ஆழ வேரூன்றி இருந்த இந்துத் தெய்வங்கள் பின் மீளுருப் பெற்றன. வடக்கே எமது யாழ்ப்பாண மாவட்டத்திலே வைணவ மதத்தின் சிறப்பு ஸ்தலங்களாக வல்லிபுரம் ஆழ்வார் ஆலயம், யாழ்.பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம், வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் ஆலயம் ஆகியன சிறந்து அருளாட்சி செய்யும் பிரசித்தி பெற்ற விஷ்ணு ஆலயங்களாகக் காணப்படுகின்றன.

உலகெலாம்நிறைந்துவிளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளா கிய காத்தற்கடவுள் ஸ்ரீமந் நாராயண மகா விஷ்ணு மூர்த்தியானவர் உண்மையான நம்பிக்கையோடு தம்மை வழிபாடியற்றுகின்ற அடியார் பெரு மக்களுக்கு அருள்புரியும் நோக்கில் எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கின்ற புனித புண்ணிய ஸ்தலம்தான் யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் ஆலயம்.

அந்த அருள்மிகு ஆலயத்தில் இன்று கொடியேற்றம்.

2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறுகின்ற கொடியேற்றத்துடன் வெகு விமரிசையாக ஆரம்பமாகின்றது.

எம் பெருமானுடைய திவ்விய மஹோற்சவ நிகழ்வுகளைக் கண்டு தரிசிப்பதற்காக யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் விஷ்ணு பக்தர்கள் இந்தக் கோயிலில் வந்து குழுமுவார்கள். மார்க்கண்டேய கோத்திரத்துப் பண்டாரவளை பத்மசாலிச் செட்டிமாருடைய பரிபாலனத்தில் நடைபெறுகின்ற இந்த அருள்மிகு ஆலயத்தில் இன்று முதல் தொடர்ந்து பத்து நாள்களுக்கு திருவிழா நடைபெறவுள்ளது.

இன்று முதலாம் நாள் பகல் சூரிய பரிதிச் சேவையாக சூரிய நாராயணர் வடிவத்தில் கொடியேற்றத்துக்கு எம் பெருமான் ஸ்ரீ தேவி பூமாதேவி சகிதம் எழுந்தருளி வருவார். இரவு அன்னச் சேவை இடம்பெறும். இரண்டாம் நாள் பகல் புரட்டாதி முதற் சனி வாரத் தில் கருட சேவையும் இரவு சேஷசயன சேவையும் மூன்றாம் நாள் பகல் கருட சேவையும் இரவும் கருட சேவையும் நடைபெறும்.

நாலாம் நாள் பகல் கருட சேவையும் இரவு அனுமான் சேவையும் ஐந்தாம் நாள் பகல் கருட சேவையும் இரவு பூந்தண்டிகையும் ஆறாம் நாள் பகல் கருட சேவையும் இரவு கஜேந்திர சேவையும் இரவு ஏழாம் நாள் பகல் கருட சேவையும் இரவு வெண்ணெய்த் தாழிச் சேவையும் எட்டாம் நாள் பகல் கருட சேவையும் இரவு அஸ்வாரூட சேவையும் நடைபெறும்.

ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழா. காலை 9 மணிக்கு அழகிய சித்திரத் தேரிலே பெருமாள் ஆரோகணித்து அருள்பாலிப்பார். மறுநாள் தீர்த்தோற்சவமும் 11 ஆம் நாள் திருக் கல்யாணமும் இடம்பெறும்.

யாழ். மணிக்கூண்டு வீதியிலே அழகிய கம்பீரமான இராஜகோபுரத்துடன் காட்சி தரும் இந்தப் புனித ஆலயத்துக்கு அடியார்கள் ஆசார சீலர்களாக வருகைதந்து பெருமாள் அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். பெருமாளைச் சேவித்தால் பெருவாழ்வு கிடைக்கும். ஓம் நமோ நாராயணாய நம!

தெய்வத் தமிழ்ச் சுடர்
இராசையா ஸ்ரீதரன்

# மாணவர் கல்வி மந்திரம்

மாணவச் செல்வங்கள் தமது கல்வியிலும் விளையாட்டிலும் பரீட்சைகளிலும் போட்டிகளிலும் அதிக மதிப்பெண்களைப் பெற்று முதலிடம் வகித்திட தினமும் சரஸ்வதி தேவியை மனதினில் பிரார்த்தித்து ஓத வேண்டிய துதிப்பாடல்

சுராசுர சேவித பாதபங்கஜா
கரே விராஜத் கமனீய புஸ்தகா
விரிஞ்சி பத்னீ கமலாசனஸ் திதா
சரஸ்வதீ நிருத்யது வாசி மேசதா

தாமரையில் வீற்றிருப்பவளும் தேவர்கள் அசுரர்கள் முதலானோரால் போற்றப்படுபவளும் அழகிய புத்தகத்தைக் கரத்தில் கொண்டவளும் பிரம்மனின் துணைவியாம் சரஸ்வதி என் வாக்கில் மகிழ்ந்து ஆடுக.

2.ஞாபக சக்திக்குரிய சிறப்பு மந்திரம்
ஸ்ரீ வித்யா ரூபிணி சரஸ்வதி சகலகலாவல்லி
சாரபிம் பாதிரி சாரதாதேவி சாஸ்திரவல்லி
வீணா புஸ்தக தாரணி வாணி கமலபாணி
-வாக்தேவி
வரநாயகி புஸ்தக ஸ்தே நாமோஸ்துதே

வித்தைகளுக்கு அதிபதியே, சரஸ்வதி தேவியே, சகலகலைகளுக்கும் தலைவியே, கல்வியின் பிம்பமாகவும், விரிவாக்கமாகவும், இருப்பவளே, சாரதாதேவியே சாஸ்திரங்களின் அதிபதியே, இசைக்கும் புஸ்தகங்களுக்கும் உரியவளே, கலைவாணியே, தாமரையில் வீற்றிருப்பவளே, நற்சொற்களுக்கு உரியவளே, வரம் தரும் நாயகியே, அப்பளுக்கற்ற அன்னம் போன்ற கல்வியின் வடிவமே, உன்னை வணங்குகின்றேன்.

ஓம் சரஸ்வதி நாமஸ்துப்யம் வரதே காமரூபிணி
வித்யாரம்பம் கரிஸ்யாமி ஸித்திர் பவதுமே ஸதா

தொகுப்பு
சந்நிதாச்சாரியார்
சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள்
வீணாகானகுருபீடம்.



தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




ஆயிரக்கணக்கான அகதிகள் மத்திய தரைக் கடலைக் கடந்த போது, ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளோ, கடலில் மூழ்கி அகதிகள் உயிரிழக்கும் செய்தியானது புலம்பெயர்பவர்களை ஐரோப்பாவை அடைய முயற்சிப்பதிலிருந்து அவர்களை அதைரியப்படுத்தும் என்ற நம்பிக்கையில், மீட்பு நடவடிக்கைகளைக் குறைக்க முயன்றனர்.



**அகதிகளை மூழ்கி இறக்க விட்டு விடுவதன் மூலம் புலம்பெயர்வோரை அதைரியப் படுத்துவதும் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் ''ஈர்ப்பு காரணியாக'' உருமாறுவதைத் தவிர்ப்பதுமே இதற்கான தீர்வா?**

ஒரு பிரிட்டிஷ் தூதரக அதிகாரி விவரிக்கையில், மீட்பு நடவடிக்கைகள் புலம்பெயர்வோரை ஊக்குவித்து, ஓர் எதிர்பாரா 'ஈர்ப்பு காரணியை' உருவாக்கி அவ்விதத்தில் இன்னும் அதிக துயரகரமான அவசியமற்ற உயிரிழப்புகளுக்கு இட்டுச் செல்லும்'' என்றார். அகதிகளை மூழ்கி இறக்க விட்டுவிடுவதன் மூலம் புலம் பெயர்வோரை அதைரியப்படுத்துவதும் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் ''ஈர்ப்பு காரணியாக'' உருமாறுவதைத் தவிர்ப்பதுமே இதற்கான தீர்வு என்றாகிறது. அப்போதிருந்து, ஆயிரக்கணக்கான அப்பாவி அகதிகள் மத்தியதரைக் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் -2017 இன் முதல் எட்டு மாதங்களில் மட்டும் 2,400 பேர் இறந்துள்ளனர்.



இத்தகைய நிலைமைகளின் கீழ், ஐரோப்பாவிற்கு ''பாதிக்கப்பட்ட குறிப்பிட்ட'' புலம்பெயர்ந்தவர்களை மட்டும் ஏற்றுக்கொள்வது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கூறுவது முற்றிலும் மற்றுமோர் எரிச்சலூட்டும் சைகையாக உள்ளது. லிபியாவில் எந்தவோர் அகதி பாதிக்கப்பட்டிருந்தாலும் அதற்கு அந்நாட்டின் உள்நாட்டு போர் நிலைமைகளே காரணமாகும்.

மேலும் ''பாதிக்கப்பட்ட குறிப்பிட்டவர்களை'' மட்டும் ஏற்றுக் கொள்வதற்கான உறுதிமொழிகளானது, எந்தெந்த அகதிகளுக்கு தஞ்சம் வழங்குவது என்பதை தேர்ந்தெடுக்கும் உரிமையை ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளுக்கு வழங்குவதற்கு ஒப்பானதாகும்.

ஆரம்ப அறிக்கைகளின்படி, ஆபிரிக்காவின் பெரும்பாலான பாகங்கள் மிகவும் வறுமையில் இருக்கும் வரையில் புலம்பெயர்வு தொடர்ந்து கொண்டு தான் இருக்கும் என்ற ஆபிரிக்க அரசு தலைவர்களின் வாதங்களை ஐரோப்பிய அதிகாரிகள் அம்மாநாட்டில் கேள்வி முறையின்றி நிராகரித்தனர். பிரச்சினை வறுமை தான் என்று கூறிய மொஹிரினி, என்றாலும் ஆபிரிக்காவில் வேலைகளை உருவாக்குவதற்காக கணிசமான நிதி வழங்கும் ''ஒரு புதிய மார்ஷல் திட்டம்'' தொடங்குவதை நிராகரித்தார். ஐரோப்பிய அதிகாரிகள் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு ஆரம்பத்தில் 6 மில்லியன் யூரோ அல்லது நீண்டகால அடிப்படையில் 50 மில்லியன் யூரோ செலவிட சிந்தித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன-இது நூறு மில்லியன் கணக்கான மக்கள் வாழும் வறுமைபீடித்த ஒரு பிராந்தியத்தின் தேவைகளின் ஒரு துளிக்கு சமமாகும்.



அம்மாநாடு ஐரோப்பிய ஒன்றியத்தின் இராணுவவாத மற்றும் அகதிகள்-விரோத கொள்கையை மட்டும் பிரதிபலிக்கவில்லை. மாறாக ஐரோப்பாவிற்குள் புலம்பெயர்வதை மட்டுப்படுத்த மிகவும் இலட்சிய திட்டங்களை யார் அறிவிப்பது மற்றும் யார் திட்டநிரலை வகுப்பது என்பதன் மீது ஐரோப்பிய சக்திகளுக்கு இடையே அதிகரித்து வரும் போட்டிகளையும் எடுத்துக்காட்டியது. மீண்டும் தேர்வாவதற்கு முயன்று வருபவரும் அவரது புலம்பெயர்வு-விரோத நற்பெயரை மெருகூட்ட முயன்று வருபவருமான ஜேர்மன் சான்சிலர் அங்கேலா மேர்க்கெல், ஐரோப்பாவிற்கு புலம்பெயர்ந்தவர்கள் வருவதை மட்டுப்படுத்த இரத்தந்தோய்ந்த எகிப்திய இராணுவ சர்வாதிகாரி ஜெனரல் அப்தெல் பதாஹ் அல்-சிசி உடனான ஓர் உடன்பாட்டை நேற்று அறிவித்தார்.

பாரீஸ் மற்றும் ரோம் முறையே லிபியாவினுள் ஜெனரல் கலிபா ஹஃப்தார் மற்றும் மிஸ்ரடா போராளிகள் குழுக்கள் தலைமையில் எதிர்விரோத ஆயுதப் படைகளை ஆதரிப்பதால், லிபியாவின் முன்னாள் காலனித்துவ சக்தியான துருக்கியுடன் பிரான்ஸுக்கு ஏற்பட்டுள்ள கூர்மையான பதற்றங்களுக்கு இடையே, மக்ரோன் ''அகதிகளின் விவர சேகரிப்பு'' (hot spot) தடுப்புக்காவல் மையங்களை பிரான்ஸ் லிபியாவில் கட்டமைக்கும் என்று ஜூலையில் அவர் முன்வைத்த திட்டங்களை கைவிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார்.



## வொஷிங்டன் ஐரோப்பாவில் அணுஆயுத போருக்குத் தயாரிப்பு செய்கிறது

அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுக்கு இடையே அதிகரித்து வரும் இராணுவ மற்றும் இராஜாங்க பதற்றங்களுக்கு இடையே, ஜேர்மன் நாளிதழ் Süddeutsche Zeitung அண்மையில் அறிவிக்கையில், அமெரிக்க காங்கிரஸ் மத்தியதூர அணுஆயுத தளவாடங்கள் மீதான உடன்படிக்கையிலிருந்து (Intermediate Range Nuclear Forces - INF) வொஷிங்டன் வெளியேறுவதற்கான முதல் படியை எடுத்துள்ளதாகக் குறிப்பிட்டது.

INF அல்லது மத்தியதூர அணுஆயுத அமைப்புமுறை மீதான வொஷிங்டன் உடன்படிக்கை என்பது (500 இல் இருந்து 5,500 மைல் தூரங்களுக்கு இடையே பயன்படுத்தப்படும்) குறுகியதூர மற்றும் மத்தியதூர ஏவுகணைகளை பயன்பாட்டில் இருந்து நீக்குவது மற்றும் அவற்றின் உற்பத்திக்கு தடைவிதிப்பது மீது அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றியத்திற்கு இடையே எட்டப்பட்ட ஒரு இருதரப்பு உடன்படிக்கையாகும்.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

103




## அத்தியாயம் - VI

### வாகரையில் மாநாடு

இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தோடு வடக்கு - கிழக்கில் அநேகமாக அனைத்து மாவட்டங்களையும் விடுதலைப்புலிகள்தங்கள்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்கள். தமிழர் தாயகம்மீது தாம் நடத்தும் நிர்வாகக் கட்டுப்பாட்டுக்குச் சட்ட ஆதரவு வேண்டும் என்று விடுதலைப் புலித் தலைமை விரும்பியது. இத்தகைய சூழ்நிலையிலேயே அரசுத் தலைவரைச் சந்தித்த புலித் தூதுக்குழு, மாகாணசபையைக் கலைத்துவிட்டு, புதிய தேர்தல்களை நடத்துமாறு அவரைக் கேட்டது. சபையைக் கலைப்பதற்குப் பெருமாளுடைய தனி அரசுப் பிரகடனம் ஒன்றே போதும் என்று நாம் பிரேமதாசாவிடம் கூறினோம். நாடாளுமன்றத்தில் ஒரு சீர் திருத்தச் சட்டமே தேவையாக இருந்தது. இதைப் பிரேமதாசாவின் ஆளும் கட்சியால் எளிதாகப் பெற்றிருக்க முடியும்.

ஆனால், அரசுத் தலைவர் தடுமாறினார். பிரேமதாசா வேண்டுமென்றே தமது வாக்குறுதிகளை நிறைவேற்றாது விடுகின்றார் என்பது விடுதலைப் புலிகளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. புதிய தேர்தல் நடத்தப்பட்டால், விடுதலைப் புலிகள் பெரு வெற்றி பெற்றுத் தமிழர் தாயகத்தில் சட்டத்துக்கு அமைவான நிர்வாகத்தை நிறுவுவார்கள் என்பது பிரேமதாசாவுக்கு நன்கு தெரியும். அப்படி நடைபெறும் பட்டசத்தில் அனைத்துலக அங்கீகாரம் புலிகளுக்குக் கிடைத்துவிடும் என்று அவர் அஞ்சினார். இது சுயாட்சியான மேலதிக அதிகாரங்களைக் கோருவதற்குத் தூண்டுவதாகிவிடும்என்றும்பிரேமதாசா அஞ்சினார்.

### பிரேமதாசாவின் இரகசியத் திட்டம்

அரசியல் சுதந்திரத்துக்கும் சுதந்திர அரசுக்கும் மாற்றீடு ஒன்றைத் தேடுவது விடுதலைப் புலிகளின் அரசியல் இலட்சியத்துக்கு விரோதமானதாக அமையுமா என்று பாலாவுடன் தனியாக இருக்கும்போது நான் விசாரித்ததுண்டு. விடுதலைப் புலிகளின் அரசியல் அணுகு முறையில் முரண்பாடு எதுவும் இல்லை என்று பாலா பதிலளித்தார். புலிகளின் இறுதி இலக்கானது சிங்கள மக்களுடன் இணைந்து வாழும் பரிசோதனை முயற்சிகள் அனைத்தும் தோல்விகாணும் பட்சத்தில் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுதந்திர அரசை நிறுவுவதே என்று பாலா விளக்கினார். பிரேமதாசா முட்டுக்கட்டைகளை நீங்குவாரானால், அதாவது மாகாண சபையைக் கலைத்து 6ஆவது சட்டத் திருத்தத்தைக் கைவிட்டு, புதிய தேர்தல்களை நடத்துவாரானால் வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களுக்கு முகங்கொடுக்க விடுதலைப் புலிகள் முழுமையாகத்தயாராக இருக்கின்றார்கள் என்று கூறினார்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையிலே சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்வது சாத்தியமா என்பதை பரீட்சித்துப் பார்க்கும் ஒரு முக்கிய சந்தர்ப்பம் இதுவாகும். இந்த மாற்று வழியைக் கடைப்பிடிப்பதால் புலிகள்எதையும்இழக்கப்போவதில்லை. தேர்தலில் புலிகள் வென்றால், தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம் என்ற எண்ணக் கருக்களுக்கு அவர்கள் உறுதியான நிதர்சன வடிவம் கொடுப்பார்கள். இவையே அவர்களுடைய வெளிப்படையான அரசியல் இலட்சியங்கள் என்றும் பாலா தெளிவுபடுத்தினார்.

பிரேமதாசாவைப் பொறுத்த வரையிலே, விடுதலைப் புலிகளை வழிப்படுத்த அவர் தமது சொந்தத் திட்டம் ஒன்றை வகுத்திருந்தார். அதற்கேற்ப சபையைக் கலைப்பதற்குத் தாமதித்தார். புதுத்தேர்தல் வாய்ப்பையும் தள்ளிப் போட்டார். 6 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது தொடர்பான முக்கிய விடயத்தைக் கண்டும் காணாதவராகப் புறக்கணித்தார். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவது முடியவே முடியாது என்று வாதிட்டார். இறுதியில் பிரேமதாசாவுடன் தனிப்பட்ட சந்திப்புக்களை நடத்துவதால் யதார்த்த அரசியல் தீர்வுகளுக்கு அதிக பயன் கிடைக்கப்போவதில்லை என்பது தெளிவாகிற்று. மிகுந்த பொறுமையுடன்அவர்களுடைய நீண்ட பிரசங்கங்களைச் செவிமடுப்போம். ஒரே மக்கள் ஒரே தேசம் என்ற அவருடைய மும்மணிக் கோட்பாடுகளோடு அனைத்து இனங்களும் அமைதியாகவும் ஒத்திசைவாகவும் வாழலாம் என்ற தத்துவமும் எப்போது இருக்கும்.

ஹமீது எமது விடுதி அறைக்கு வந்து, பாலாவுடனான தமது பிரத்தியேகச் சந்திப்பின்போது விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதக் களைவு நடதத்துவது பற்றிப் பேச்சைத் தொடங்கியபோது, பிரேமதாசாவின் இரகசியத் திட்டம் மெதுவாக அம்பலமாகிற்று. மே மாத நடுப்பகுதியில் ஒரு மிகவும் வெப்பமான நாளன்றே இந்தக் கலந்துரையாடல் நடந்தது. விவாதப் பொருளும் சூடானது. எனவே, விவாதமும் சூடுபிடித்தது. அரசுத் தலைவரின் அச்சங்களையும் அங்கலாய்ப்புக்களையுமே தாம் பிரதிபலிக்கிறார் என ஹமீது கூறினார். ''தேர்தல் சுதந்திரமாகவும் நியாயப்படியும் நடைபெறவேண்டும் என்று பிரேமதாசா விரும்புகின்றார்; அந்தத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ். உட்பட அனைத்துக் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்றும் அரசுத் தலைவர் கருதுகின்றார். ஆனால், வடக்குக் கிழக்கிலே விடுதலைப் புலிகள் ஆயுதங்களோடு ஒரு மேலாண்மை நிலையை வகித்தால் அப்படியான தேர்தல் சாத்தியமாகாது. ஆகவே, புதிய தேர்தல் நடத்துவதானால் அதற்கு முன்புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும். இதுவே அரசுத் தலைவருடையதும் ரஞ்சன் விஜயரத்ன போன்ற சில அமைச்சர்களுடையதும் கருத்தாகும் என்று அமைதியாக, ஆனால், உறுதியாகக் ஹமீது தெரிவித்தார்.

விடுதலைப் புலிப் பிரதிநிதிகளை அரசுத் தலைவர் தலைவர் தனிமையில் சந்தித்தபோது ஆயுதக் களைவு விடயத்தை ஏன் குறிப்பிடவில்லை என்று பாலா கேட்டார். அதேசமயம், இந்தியப் படைகள்வெளியேறிய பின்புலிகளுக்கு எதிரான வேறு தமிழ்க் குழுக்களுடன் தனியான சந்திப்புக்களை பிரேமதாசா நடத்திவருகின்றார் என பாலா முறையிட்டார்.

வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் பாதுகாப்பு ஏற்பாட்டைப் பொறுத்தவரையிலே புலிகள் ஆயுதங்களை வைத்திருக்கின்றமை ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்படவேண்டும் என்று பாலா விளக்கமும் அளித்தார். நிரந்தர அரசியல் தீர்வு மூலம் நிரந்தர அமைதி நிறுவப்படுமானால் அந்தப் பாதுகாப்பு அமைப்புக்கு புலிகளே பொறுப்பாக இருப்பார்கள். சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பேண, பயிற்சி வழங்கப்பட்ட பாதுகாப்புப் படை ஒன்று ஆயுதங்களுடன் புலிகள் வசம் இருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு உறுதியான பாதுகாப்பை வழங்கக்கூடிய ஆளணி, தளவாடம், அனுபவம் ஆகியவை புலிகளிடம் உள்ளன என்பதையும் திகைத்து நின்ற அரச அணித் தலைவரிடம் பாலா தெளிவுபடுத்தினார்.

''உங்களுடைய அரசுத் தலைவர், புதிய தேர்தலுக்கான தடைகளை நீக்க, அதாவது சபையைக் கலைத்து, 6 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கத் தயாராக அல்லர். இந்தக் கட்டத்தில் புலிகளிடமிருந்து ஆயுதக் களைவு நடத்தவேண்டும் என்பது காலத்துக்கு முந்திய அவசர முடிவாகும்; மேலும் மாகாண சபை மட்டுமே ஒரு நிரந்தர தீர்வுக்கான நல்ல தளமல்ல; மாகாண சபைத் தேர்தலில் புலிகள் நிற்க முன்வருகின்றமை, அதை ஓர் இடைக் கால ஏற்பாடாக ஏற்பதேயன்றி, நிரந்தரத் தீர்வாக ஏற்று அல்ல; சிங்கள மக்களுடன் அமைதியாகவும் ஒத்திசைவாகவும் இணைந்துவாழ விரும்புகின்றோம். மக்களாட்சி வழிமுறைகளை நிறுவி, மக்களாட்சி அரசியல் நடைமுறைகளை பேண விரும்புகின்றோம். அனைத்துக் குழுக்களும் கட்சிகளும் தேர்தலில் பங்கெடுக்க வாய்ப்பு வழங்கும் வகையில் சுதந்திரமான, நியாயமான அடிப்படையிலான தேர்தலை நடத்துவதற்கு அரசுடன் நாம் ஒத்துழைப்போம். மக்களின் பிரதிநிதிகளாக நாம் தேர்ந்தெடுக்கப்பட்டமையும் தமிழ் மக்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற முக்கிய பிரச்சினை சம்பந்தமாக நிரந்தரத் தீர்வு காண்பது பற்றி நாம் பேச்சு நடத்தலாம்''.

– என்று புலிகளின் நிலைப்பாட்டை பாலா எடுத்துரைத்தார். ஹமீது கருத்துத் தெரிவிக்கும் போது மாகாண நிர்வாகக் கட்டுமானத்தின் ஓர் அம்சமாக மாகாணக் காவல்துறையை அமைத்து, புலிப் போராளிகளை காவல் அதிகாரிகள் ஆக்கலாமே என்று கூறினார். ''அது சாத்தியப்படும் பட்சத்திலும். வடக்கு - கிழக்குக்கான 10 ஆயிரம் பேர் அடங்கிய காவல்துறையை உருவாக்க விடுதலைப் புலிகளுக்கு மேலும் ஆயுதங்களும் ஆள்களும் தேவைப்படும்''

– என்று பாலா கருத்துத் தெரிவித்தார்.

''அப்படிப் பார்த்தால், விடுதலைப் புலிகளின் காவல்துறைப் பிரிவுக்கு அரசுத் தலைவர் மேலும் ஆயதங்களை வழங்கவேண்டியிருக்கும்''

– என்று பாலா கேலியாகக் குறிப்பிட்டார். '

விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்று தொடங்கிய விவாதம், புலிகளுக்குத் திரும்பவும் ஆயுதம் வழங்கும் கட்டத்துக்குத் தாவியது. எமது விடுதி அறையை விட்டு வெளியேறும்போது, ஹமீது வெகுவாகத் தளர்ந்துபோயிருந்தார்.

(தொடரும்...)

# இணைக்க அரசியல்

## எங்கே கொண்டு போகும்?

■ ருத்திரன்

ஐக்கிய நாடுகள் சபையின் 36 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியி ருக்கிறது. கூட்டத்தொடர் ஆரம்பிப் பதற்கு முன்னதாகவே ஐ.நாவின் விசேட அறிக்கையாளர்கள், நிபுணர் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்து பல்வேறு தரப்புக்களையும் சந்தித்து பேசியிருந்தனர். ஆட்சிமாற் றம் ஏற்பட்ட கையுடன் ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கை அரசாங்கமும் இணை அனுசரணை வழங்கும் வகையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது.

அந்தத்தீர்மானங்கள் நடைமுறைப் படுத்தப்படாத நிலையில் மீண்டும் இவ்வாண்டு இலங்கை அரசாங்கத் திற்கு இரண்டு வருட கால நீடிப்பும் வழங்கப்பட்டிருந்தது. சர்வதேச ரீதியில் இலங்கை அரசாங்கத்திற்கு இருந்த நெருக்குவாரத்தை மைத்திரி - ரணில் கூட்டரசாங்கம் தளர்த்தியுள் ளதுடன், சர்வதேச சமூகத்தின் அபி மானத்தைப் பெறுவதற்கும் இராஜ தந்திர நகர்வுகளை மேற்கொண் டுள்ளது. அரசாங்கம் தனது இந்த நகர்வுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைமையுடனான உறவையும் சரியாகப் பயன்படுத்திக் கொண்டது.

இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா. விசேட குழுவினர்கள் வெளி யிட்ட அறிக்கைகளின் அடிப்படையில் ஐ.நாவின் மனிதவுரிமை ஆணையாளர் செயிட் அல்ஹுசைன், கூட்டத்தை ஆரம்பித்து வைத்துஉரையாற்றும் போது சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்டமீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக் கூறலை உறுதிசெய்ய



நம்பகமான நடவடிக்கைகளை இலங்கை எடுக்காதமை சர்வதேச சட்ட நடவடிக்கைகளுக்கு இன்னும் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவித்திருக்கிறார். இதனையடுத்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலு வலகத்தை அமைப்பதற்கான வர்த் தமானி அரசாங்கத்தால் உடனடி யாகவே வெளியிடப்பட்டுள்ளது.

மனிதவுரிமை ஆணையாளரின் கடும் தொனியுடனான உரையை அடுத்து அவசர அவசரமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அலு வலகச் செயற்பாடுகள் வெள்ளிக் கிழமை முதல் ஆரம்பாகி தென்பகுதி யில்ஏற்பட்ட அரசியல் அழுத்தத்திற்கு பயந்து மீண்டும் அது கிடப்பில் போடப்பட்டுள்ளது. கால அவகாசம் வழங்கி 6 மாதங்கள் கடந்துள்ள நிலையில் ஐ.நா. குழுவினர் இலங் கையின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தி அடைந்திருக்கின்றனர். பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் காணா மல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டி யும், தமது காணிகளை விடுவிக்கக் கோரியும் ஆரம்பித்த போராட்டங்கள் இன்று 200 நாள்களைக் கடந்தும் தொடர்கின்றன. அந்தப் போராட் டங்களை முடித்து வைப்பதற்கோ அல்லது அந்த மக்களது கோரிக்கை களைநிறை வேற்றுவதற்கோ மைத்திரி - ரணில் அரசாங்கம் காத்திரமான எந்தவொரு நடவடிக்கையையும் இதய சுத்தியுடன் முன்னெடுக்க வில்லை.தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைமையும் இந்த விடயத்தில் காத்திரமாகச் செயற் பட்டதாக தெரியவில்லை. ஐ.நாவின் அதிருப்தியையடுத்து தமக்கு வழகங்கப்பட்ட கால எல்லைக்குள் வழங்கிய வாக்குறுதிகளை செய்வோம் எனப் புதிய வெளிவிவகார அமைச்சர்



உறுதியளித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியும் இது தொடர்பில் தெளிவுபடுத்தவுள்ளார். இந்நிலையில் இழுபறியில் இருந்த புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கையும் நாடாளுமன் றத்திற்கு வந்துள்ளது. அரசாங்கத் தின் இத்தகைய நகர்வுகளின் பின் னணியில் சர்வதேச அழுத்தம் இருப் பதை மறுத்து விட முடியாது. இலங் கைத் தீவுவைப் பொறுத்தவரை தமிழ் தேசிய இனம் நாடு சுதந்திரம் பெறு வதற்கு முன்பிருந்தே பௌத்த சிங் கள அடிப்படைவாதிகளின் சிந்தனை களால் கடுமையாக பாதிக் கப்பட்டவர் களாகவும், ஒடுக்கு முறைக்கு உள்ளாக் கப்பட்டவர்களாகவும் உள்ளனர்.

தமிழ்த் தேசிய இனமும் இந்த நாட் டில் சமத்துவமாகவும், சகல உரிமை களுடனும், ஏனைய இனங்களுடன் கைகோத்து வாழவே விரும்புகிறது. அதனை தென்னிலங்கையின் பௌத்த சிங்கள அடிப்படைவாதிகள் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக வடக்கு முதலமைச்சர் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும், அவர்களின் பிரதிநிதியா கவும் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீட மகாநாயக்கர்களை சந்தித்துப் பேசி யிருந்தார். அதன்போது அவர் தமிழ் மக்களது அபிலாசைகள் குறித்தும், தமிழ் தேசிய இனம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் தெரிவித்திருந் தமையுடன், தமிழ் மக்களது பிரச்சி னைகளுக்கு சமஷ்டி அடிப்படையி லான தீர்வே பொருத்தமானது என் பதையும் வலியுறுத்தியுள்ளார்.

ஆனால், பௌத்த மகாநாயக்கர்கள் சமஷ்டியை ஏற்றுக் கொள்ள மறுத்துள்ள மையுடன், அதனை பிரிவினைவாத மாகவும் காட்ட முயல்கின்றனர். இத்த கைய மதத்தலைவர்களை பின்புல மாகக் கொண்ட பெரும்பான்மை சிங் கள மக்களும், தென்னிலங்கையின் ஆட்சியாளர்களும் தமிழ் மக்களது கோரிக்கை தொடர்பிலோ அல்லது அவர்களது அபிலாஷை தொடர்பிலோ கரிசனை கொண்டுள்ளவர்களாகத் தெரியவில்லை. அவர்களது மனநிலை யில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வில்லை. இந்த நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை எட்டுவதற்கு விட்டுக் கொடுப்புடன் செல்ல தமிழ்த் தேசிய இனம் தயாராகவுள்ள போதும் சிங் கள தேசிய இனம் தமது பௌத்த தேசிய அடிப்படைவாத மனநிலை யில் இருந்து இறங்கி வரத் தயார் இல்லாத நிலையே காணப்படுகின் றது. இந்தப் பின்னணியில் கொண்டு வரப்பட இருக்கும் புதிய அரசமைப்பு எவ்வகையில் தமிழ் மக்களின் அபிலா சைகளை நிறை வேற்றப் போகின்றது என்ற கேள்வி எழுகிறது.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த வரை சர்வதேச ரீதியில் தற்போதுள்ள அழுத்தத்தை இல்லாமல் செய்வதே அதன் பிரதான நோக்க மாகவுள்ளது. அதற்கான காய் நகர்த் தல்களேயே அது மிகவும் சூட்சுமாக முன்னெடுத்து வருகின்றது. இந்த நாட்டின் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற மனநிலையில் இல் லாது சர்வதேச அழுத்தத்தை தணிப் பதற்காக வருகின்ற அரசமைப்பானது



தமிழ் தேசிய இனத்தின் கோரிக்கை களை ஒருபோதும் பிரதிபலிக்க போவ தில்லை. மறுபுறம் இரத்தம் சிந்தி போராடியதன் விளைவாக தமிழ்த் தேசிய இனத்தினை முன்னிறுத்தி உருவாக்கப்பட்ட மாகாண சபைகளின் அதிகாரத்தை பறிப்பதற்கான அல்லது மாகாண சபைகளைத் தென்னிலங் கையின் பிரதான ஆட்சியாளர்கள் கையாளக் கூடிய வகையிலான திருத்தம் ஒன்றை 20 ஆவது திருத்தச் சட்டம் மூலம் நடைமுறைப் படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஒருபுறம் பொறுப்புக் கூறல், நீதி யான விசாரணை, மீள நிகழாமையை உறுதிப்படுத்தும் வகையில் நிரந்தர தீர்வு எனக் கூறிக் கொண்டு மறுபுறம், தற்போது உள்ள அதிகாரங்களையும் பறித்து, குறிப்பாக 13 ஆவது திருத்தச் சட்டம் மூலம் வழங்கியதை 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் பறித்து. தமிழர் தாயகப் பகுதிகளிலும் தென்னிலங்கையின் கரங்களை ஓங்கச்செய்வதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. இதன் யதார்த்த நிலைகளைத் தமிழ்த் தேசிய இனமும், அதன் தலைமைகளும் புரிந்துகொள்ளவேண்டும்.

2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசாங்கம் சமாதான உடன்படிக்கை மேற்கொள் ளபட்டநிலையில் விடுதலைப் புலி கள் அமைப்புக்குள் பிளவுகள் ஏற் பட்டு, முள்ளிவாய்கால் வரை தமிழ்த் தேசிய இனம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.

தமிழ் மக்களுக்கான தீர்வு எனக் கூறி தமிழ் மக்களை நட்டாற்றில் விடு வதற்கான முயற்சிகளே நல்லாட்சி என்னும் இந்த இணக்க அரசியல் ஆட்சியில் இடம் பெறுகிறது. புதிய அரசமைப்பை நடைமுறைப்படுத்தி அதில், இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு வழங்கப்பட்டு விட்ட தாக சர்வதேச சமூகத்திற்கு காட்ட இந்த அரசாங்கம் எத்தனிக்கின்றது. அதன் மூலம் சர்வதேச அழுத்தத்தை இல்லாமல் செய்வதுடன், தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினையைத் தீர்த்துவிட்டதாகக் கூறி சர்வதேச



மட்டத்தில் தமிழ் மக்கள் சார்பாகவுள்ள ஆதரவு நிலையை இல்லாமல் செய் வதற்கான முயற்சிகள் இடம்பெறு கின்றன.

தமிழ் மக்களது அபிலாஷைகளை புறக்கணித்த அரசாங்கம் தீர்வுத் திட்டம் என புதிய அரசமைப்பைத் திணிக்க முயல்வது என்பது எதிர் காலத்தில் தமிழ் இனத்தின் தனித்துவ அடையாளங்களையும், இருப்பையும் கேள்விக்குட்படுத்துவதாகவே அமை யும். அப்போது தமிழ் மக்களுக்காக யாரும் வர மட்டார்கள். இன்று கண் முன்னே மியன்மாரின் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்படும் இனச்சுத் தி கரிப்பை பலநாடுகளும் வேடிக்கைதான் பார்த்துக்கொண்டு இருக்கின்றன என்பதை நாம் மறந்து விடமுடியாது.

இந்நிலையில், தமிழ்த் தேசிய இன மும், அவர்களைப் பிரதிநிதித்து வப் படுத்தும் தமிழ் தலைமைகளும் அர சாங்கத்தின் காய்நகர்த்தல்கள் குறித் துக் கவனம் செலுத்த வேண்டும். இணக்க அரசியல் என்ற போர்வையில் அரசின் காய் நகர்த்த லுக்கு துணை போவது என்பது இருக்கின்ற துணியை யும் பறி கொடுத்து விட்டு, தமிழ்த் தேசிய இனத்தை ஒட்டுத்துணி கூட இல்லாமல் நடுவீதியில் நிற்கும் நிலை யையே உருவாக்கும். ★

நன்றி: 'சமகளம்'

# வாழ்வாதாரத்தை இழக்கும் நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள்!





முல்லைத்தீவு, செப். 22

வெளிமாவட்ட மீனவர்களால் தமது வாழ்வாதாரத் தொழிலான மீன்பிடித் தொழிலைக் கைவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடமாகாண மீன்பிடி அமைச்சர் நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே போரினால் பேரழிவை சந்தித்த தமக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலைமை தொடர்பில் மீனவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

வடக்கு மாகாண சபையின் மீன்பிடி அமைச்சராக பதவியேற்றுக்கொண்ட கந்தையா சிவனேசன், நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள மீனவ சங்கப் பிரதிநிதிகளுடன் முக்கிய கலந்துரையாடலொன்றை நடத்தினார்.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் குறைகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அறிந்துகொள்ளும் நோக்கிலேயே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் அமைச்சருடன் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர்கள் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

எனினும், மீனவர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே இருந்தது. இதற்கு மீனவர்கள் மத்தியில் நிலவும் விரக்தியே காரணம் என முல்லைத்தீவு மாவட்ட மீனவ சமாசத் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.



போரினாலும் பேரழிவைச் சந்தித்த முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களான தமது மீன்வளம் வெளிமாவட்ட மீனவர்களால் திட்டமிட்டு சூறையாடப்படுகின்றது என மீனவர்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

வெளிமாவட்டங்களிலிருந்து வரும் மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்தாலும் அவற்றை அதிகாரிகளோ அல்லது கடற்படையினர் உட்பட அரச படையினரோ தடுப்பதில்லை என்று குற்றஞ்சாட்டும் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் அதற்கு மத்திய அரசில் இருக்கும் அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதே காரணம் என்றும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது முல்லைத்தீவு மாவட்ட தமிழ் மீனவர்கள் தமது தொழிலை வளர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் சிவநேசன் கோரிக்கை விடுத்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட தமக்கு ஆழ்கடலில் சென்று மீன்பிடிப்பதற்கான படகுகளை வாங்குவதற்கு வசதி இல்லை என்று தெரிவித்த முல்லைத்தீவு மீனவர்கள், படகுகளைக் கொள்வனவு செய்ய உதவ வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தகாலத்திலும் அனைத்து வசதிகளுடனும் இருந்த சம்மாட்டிகள் இறுதிக்கட்ட யுத்தத்தில் அனைத்தையும் இழந்து வாங்கிய கடன்களைக்கூடத் திருப்பிச் செலுத்த முடியாதிருப்பதாக சுட்டிக்காட்டிய சம்மாட்டியொருவர், போரினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

## புறக்கோட்டையில் தீ விபத்து 16 கடைகள் எரிந்து நாசம்!



கொழும்பு, செப். 22

புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத் தெருவின் கடைத் தொகுதியில் ஏற்பட்ட தீ காரணமாக பல கடைகள் சேதமடைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலையில் குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது என கொழும்பு தீயணைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால், சுமார் 16 கடைகள் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் இதற்காக 6 தீயணைப்பு வாகனங்களும் 35 தீயணைப்பு வீரர்களும் செயற்பட்டனர் என தீயணைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

ஆபரணங்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றிலேயே முதலாவதாக தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

தீயிற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## வறட்சி நிவாரணத்தில் புறக்கணிப்பு; கிளி.- கண்ணகிநகர் மக்கள் புகார்!





கிளிநொச்சி , செப். 22

கிளிநொச்சி - கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கண்ணகிநகர் மேற்கு பிரதேச மக்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை என அந்த பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் கரைச்சி பிரதேச செயலாளருக்கும், மாவட்ட அரசாங்க அதிபருக்கும், நேற்று காலை நேரில் சென்று அந்த பகுதி மக்கள் மகஜர் கையளித்துள்ளனர்.



ஆனால், மாவட்டத்தின் ஏனைய கிராமங்களுக்கு வழங்கப்பட்டது போன்று எங்களது கிராமத்து வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை. இங்கு 85 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

மீள்குடியேற்றத்தின் ஆரம்ப காலத்தில் வழங்கப்பட்ட உதவி திட்டங்களைத் தவிர வேறு எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. உட்கட்டுமான வசதிகள் மிக மோசமாக இருக்கின்றன எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir




# ரஷ்யாவுடன் இணைந்து பங்களாதேஷில் அணுமின் நிலையம் அமைக்கும் இந்தியா

புதுடில்லி.செப்.22

பங்களாதேஷில் ரோப்பூர் அணுமின்நிலையம்அமைக்க ரஷ்யாவுடன் இணைந்து இந்தியா செயற்படுகின்றது என்று அணுசக்தி ஆணையத்தின் தலைவர் சேகர் பாசு கூறியுள்ளார்.

இதன்மூலம் ரஷ்யாவும் இந்தியாவும் மூன்றாவது நாடு ஒன்றில் அணுமின் திட்டங்களை அமைக்க முதல் முறையாக முயன்று வருகின்றன.



மேலும், இதுதான் இந்தியா முதல் முறையாக வெளிநாடு ஒன்றில் அணுமின் திட்டம் ஒன்றை அமைக்கும் முயற்சியாகும். 1974 ஆம் ஆண்டில் பொக்ரானில் அணுவெடிப்பு சோதனை நடத்திய பிறகு இந்தியா மீது விதிக்கப்பட்ட தடைகளால் வெளிநாடுகளில் அணு சக்தி தொடர்பான வணிக முயற்சிகளை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியது.

இவ்வாறு அணுசக்தி ஆணையத்தின் தலைவர் கூறினாலும் அணுசக்தி விநியோகக்குழுவில் இந்தியா உறுப்பினர் இல்லாததால் எவ்வகையான அணு சக்தி திட்டங்களை வெளிநாடுகளில் மேற்கொள்ள முடியும் என்பது தெரியவில்லை எனப்படுகிறது.

ஏனெனில், இந்த வணிகத்தை 48 உறுப்பினர்கள் கொண்ட குழுமமே மேற்கொண்டு வருகிறது.

கடந்த ஏப்ரலில் இந்தியா பங்களாதேஷிடம் இரு அணு சக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தங்களில்கையொப்பமிட்டது. ரஷ்யர்களால் ரோப்பூர் அணுமின் நிலையம் பங்களாதேஷின் தலைநகரான டாக்கா அருகில் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் நிறைவேறும் போது இந்தியா, பாகிஸ்தானிற்கு அடுத்தபடியாக மூன்றாவது அணுசக்தி நாடாக பங்களாதேஷ் உருவாகும். (ப)

## சிறையில் சசியைச் சந்தித்தார் தினகரன் மனைவி அனுராதா!



பெங்களூர்.செப்.22

பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் உள்ள சசிகலாவை தகுதி நீக்கம் செய்யப்பட்ட தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ ரங்கசாமி மற்றும் தினகரனின் மனைவி அனுராதா தினகரன் ஆகியோர் நேற்று முன்தினம் சந்தித்து பேசினார்கள்.

வழக்கமாக 15 நாள்களுக்கு ஒரு முறை சசிகலாவை உறவினர்கள் சந்தித்துப் பேச அனுமதி உண்டு அதன்படி கடந்த 17 நாள் களுக்கு முன்பு தினகரன் சந்தித்துப் பேசினார். அதன் பிறகு தினகரனின் மனைவி அனுராதா மற்றும் தகுதி நீக்கம் செய்யப்பட்ட எம்.எல். ஏ.ரங்கசாமி ஆகியோர் சந்தித்துப் பேசி உள்ளனர்.

இனி 15 நாள்களுக்குப் பிறகுதான் சசிகலாவை யாரும் சந்திக்க முடியும். இதனால் தகுதி நீக்கம் செய்யப்பட்ட எம்.எல்.ஏக்கள் சசிகலாவை சந்திக்காமலேயே தமிழகம் திரும்ப உள்ளனர்.

தகுதி நீக்கம் செய்யப்பட்ட எம்.எல்.ஏக்கள் சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பை எதிர்பார்த்துக் காத்து இருந்தனர். தங்களுக்கு ஆதரவாக தீர்ப்பு வரும் என்றும், தகுதி நீக்க உத்தரவுக்கு தடை வரும் என்றும் எதிர்பார்த்து இருந்தனர். ஆனால், தகுதி நீக்க உத்தரவுக்கு தடை கிடைக்காததால் ஏமாற்றம் அடைந்தனர்.

## பொருளாதார வீழ்ச்சியை முடக்க மோடியுடன் ஜெட்லி ஆலோசனை

புதுடில்லி,செப்.22

பிரதமர் நரேந்திர மோடியுடன் பேசி பொருளாதார வீழ்ச்சியை முடக்கி விட அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நிதி அமைச்சர் அருண் ஜெட்லி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தொடர் முடிவின் பின்னர் ஊடக வியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அருண் ஜெட்லி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் ஜூன் 30ஆம் திகதியுடன் முடிந்த நிலையில், காலாண்டில் 5.7 சதவிகிதம் ஆகச்சரிந்துள்ளது. இது 3 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகக் குறைந்த வளர்ச்சி வீதம் ஆகும். பணவீக்கத்தைப் பொறுத்தமட்டில் 4 சதவிகிதம் என்ற பணக் கொள்கை இலக்குக்குள்தான் இருக்கின்றது என அவர் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்- பருவமழைக் காலத்தில் காய்கறி



விலைகள் சாதாரணமாக உயரும். இந்தக் காலகட்டத்தில் 3.6 சதவிகிதம் என்பது பணவீக்கம் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதையே காட்டுகிறது. ஓகஸ்ட் மாதம் சில்லறைபணவீக்கசதவிகிதம் 5 மாதங்களில் இல்லாத உயர்ந்தபட்ச அளவாக 3.36 சதவிகிதமாக இருந்தது. கைவசமுள்ள அனைத்து பொருளாதார குறியீடுகளையும் கவனத்தில் கொண்டுள்ளோம். தேவைப்படுகிற எந்தவொரு கூடுதலான நடவடிக்கையையும் அரசு எடுக்கும். பொருளாதார வீழ்ச்சியை முடக்கி விட ஏதுவாக கூடுதல் (அதிரடி) நடவடிக்கைகள் எடுப்பது பற்றிச் செயலாற்றி வருகிறோம். இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்து ஆலோசனை செய்துவிட்டு அறிவிப்பு வெளியிடப்படும் என்று தெரிவித்துள்ளார்.

## பீகாரில் 900 கிலோ கஞ்சா பறிமுதல்

பட்னா,செப்.22

பீகாரில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள 900 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் சமீபகாலமாக போதைப்பொருள் பழக்கம் அதிகரித்து வருகின்றது. இதைத் தடுத்து நிறுத்த பொலிஸார் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளின்போது ஆங்காங்கே போதைப் பொருள்கள் சிக்குகின்றன.

இந்நிலையில், பீகார் மாநிலத்தில் வாகனம் மூலம் போதைப்பொருள் கடத்தல் நடைபெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கஞ்சா கடத்திவரப்பட்டதை பொலிஸார் கண்டுபிடித்தனர். பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் அளவு 900 கிலோ இருக்கும் எனவும் அதன் மதிப்பு ஒரு கோடி ரூபாய் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கமலஹாசனை இன்று சந்திக்கின்றார் டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால்

சென்னையில் நடிகர் கமலஹாசனை டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் இன்று சந்தித்து பேச உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழக அரசியல் களம் உச்சகட்டப் பரபரப்பில் இருக்கும் தற்போதைய சூழ்நிலையில் நடிகர் கமலஹாசன் தனது டுவிட்டர் பக்கம் மூலமாக பல்வேறு அதிரடி கருத்துக்களை தெரிவித்து வருகின்றார். ஆளும் அ.தி.மு.க. மீது அவர் கடுமையான விமர்சனங்களை தொடர்ந்து முன்வைத்துக் கொண்டே வருகின்றார்.

இதனால் கமலஹாசன் தனிக்கட்சி தொடங்கி அரசியலில் களமிறங்குவார் என்று செய்திகள் வெளியான வண்ணம் உள்ளன. இந்த நிலையில், இன்று தமிழகம் வரும் டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் சென்னையில் கமலஹாசனை சந்தித்து பேச உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



காலைக்கதிர்
Kalaikkathir



# சிரியாவில் 850 கிளர்ச்சியாளர்களை கொன்று குவித்த ரஷ்ய விமானப்படை

மஸ்கோ,செப்.22

சிரியாவில் அரசுக்கு எதிராக ஆயுதமேந்தி போராடிவரும் கிளர்ச்சியாளர்கள் 850 பேரை கடந்த 24 மணி நேரத்தில் விமானப்படை கொன்றுள் ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச் சகம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் அதிபர் பஷார் அல் ஆசாத் அரசுக்கு எதிராக பல்வேறு கிளர்ச்சிக்குழுக்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆயுதமேந்தி போராடி வரு கின்றது. அரசுத்தரப்புக்கு ஆதரவாக ரஷ்யாவும், கிளர்ச் சிக்குழுக்களுக்கு ஆதரவாக அமெரிக்காவும் களமிறங்கி யுள்ளது.



இத்தனை ஆண்டுகள் நடைபெற்று வரும் சண்டையினால் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் பலியாகியுள்ளனர். பல லட்சம் மக்கள் அகதிகளாக பல்வேறு நாடு களில் தஞ்சமடைந்துள்ளனர். இந்நிலையில், அந்நாட்டின் இட்லிப் நகரில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் சுமார் 850 கிளர்ச்சியாளர்கள் வான் தாக்குதல் மூலம் கொல்லப்பட் டனர் என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கிளர்ச்சிக்குழுக்களுக்கு ஆயுத உதவிகள் வழங்குவதை நிறுத்த அமெரிக்க உளவு அமைப் பான சி.ஐ.ஏ ஏற்கனவே முடி வெடுத்துள்ளதால், இன்னும் சில காலத்தில் கிளர்ச்சியாளர் முற்றிலும் ஒடுக்கப்படும் நிலை அங்கு ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.



## மலாலாவை சந்தித்த பிரியங்கா சோப்ரா

நடிகை பிரியங்கா சோப்ராவுடன் நோபல் பரிசு பெற்ற மலாலா நியூயோர்க்கில் சந்தித்த போது எடுக்கப்பட்ட புகைப்படம் இணைய தளங்களில் வைரலாகப் பரவி வருகிறது.

அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மலாலா யூசுப்சாய் கடந்த இரண்டு மாதங்களாக டுவிட் டர் போன்ற இணையத்தளங்களின் மூலம் தனது கருத்துக்களைப் பகிர்ந்து வருகின்றார்.

இந்த நிலையில் யுனிசெவ் நல்லெண்ண தூதரான நடிகை பிரியங்கா சோப்ராவை மலாலா சந்தித்து பேசினார். நியூயோர்க்கில் நடந்த இந்தச் சந்திப்பு குறித்து மலாலா தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

அதில் அவர், பிரியங்காவை சந்தித்தமையை நம்ப முடியவில்லை என குறிப்பிட்டிருந்தார். அதற்கு பிரியங்கா மலாலாவை சந்தித்து பேசி யமை மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது என பதில் டுவிட் செய்திருந்தார்.

அப்போது அவர்கள் எடுத்த புகைப்படம் இணையத் தளங்களில் வைரலாக பரவி வருகி றது.

## மனிதாபிமான அடிப்படையில் வடகொரியாவுக்கு நிதியுதவி

மனிதாபிமானத்தின் அடிப்படை யில் வடகொரியாவுக்கு 8 மில் லியன் டொலர் அளவில் நிதியுதவி வழங்கப்பட உள்ளது என தென் கொரிய அரசு தெரிவித்துள்ளது.

வடகொரியா சமீப காலமாக அணுகுண்டுகளையும், கண்டம் விட்டு கண்டம் பாயும் பல ஏவுக ணைகளையும் பரிசோதித்து வரு கின்றது. இதற்கு தென்கொரியா உள்ளிட்ட உலக நாடுகள் தங்கள் எதிர்ப்புகளைத் தெரிவித்து வரு கின்றன.

மேலும், வடகொரியா அரசு மீது பொருளாதாரத் தடைகளும் விதிக்கப்பட்டுள்ளன. ஆனால் இதையெல்லாம் பொருட்படுத் தாத வடகொரியா, தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகின்றது.

இந்த நிலையில், மனிதாபிமான அடிப்படையில் வடகொரியா வுக்கு 8 மில்லியன் டொலர்கள்




வழங்கப்பட உள்ளது என தென் கொரிய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அதிகாரிகள் கூறுகையில்:-

உலக உணவு அமைப்பு மற் றும் யுனிசெப் அமைப்பின் பரிந் துரையின் பேரில் வடகொரியா வுக்கு நிதியுதவி அளிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட் டம் நடைபெற்றது. அப்போது வடகொரியாவுக்கு நிதி வழங்கு வதற்கு கண்டனங்கள் எழுந்தன.

ஆனாலும், மனிதாபிமானத்தின் அடிப்படையில் வடகொரியா வுக்கு நிதியுதவி வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 8 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

## சிறுமி வன்புணர்ந்து கொலை; மக்கள் முன்னிலையில் தூக்கு

ஈரானில் 7 வயது சிறுமியை வன்புணர்ந்து கொன்ற வனை நீதிமன்ற உத்தரவின்படி பொதுமக்கள் முன்னிலையில் தூக்கிலிட்டனர். இந்தக் காட்சி களை பொதுமக்கள் படம் பிடித்து இணையத் தளங்களிலும் வெளியிட்டுள்ளனர்.

ஈரானில் உள்ள அர்டேபிள் பிராந்தியத்தில் 7 வயது சிறுமியை இஸ்மாயில் ஜபர்சேத் (வயது 42) என்பவன் வன்புணர்ந்து கொலை செய்தான். இது சம்பந்தமான வழக்கு நீதிமனறத்தில் நடந்து வந்தது.

அவனை பொதுமக்கள் முன்னிலையில் தூக்கில் போடும்படி ஈரான் நீதிமனறம் உத்தரவிட்டது. அவனை பர்சாபாத் என்ற இடத்தில் உள்ள சதுக் கத்தில் பொதுமக்கள் முன்னிலையில் தூக்கில் போட ஏற்பாடு செய்யப்பட்டது.


முகத்தை மூடி அவனை அழைத்து வந்து மக்கள் கூட்டத்தின் மத்தியில் தூக்கிலிட்டனர். அப்போது பொதுமக்கள் ஆரவாரம் செய்தனர்.

## அணு ஆயுதப் போரில் இருந்து உலகை காப்பாற்றியவர் மரணம்

மஸ்கோ,செப்.22

அமெரிக்கா மற்றும் சோவி யத் யூனியன் இடையிலான பெரும் அணு ஆயுத போரை நிறுத்தி உலக அரங்கில் பெரும் பாராட்டை பெற்ற ரஷ் யாவின் முன்னாள் ராணுவ அதிகாரி ஸ்டானிஸ்லாவ் பெட்ராவ் (வயது 77) மரணம் அடைந்தார்.

சோவியத் ரஷ்யாவின் ராணுவ அதிகாரியாக பணி யாற்றியவர் ஸ்டானிஸ்லாவ் பெட்ராவ். இவர் 1983ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி ராணுவத் தளத்தில் ரேடார்கள் கண்கா ணிக்கும் பணியில் பெட்ராவ் ஈடுபட்டிருந்தார். அப்போது அமெரிக்கா தொடர்ச்சியாக கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுக ணைகளை வீசியது என ரேடார் தரவுகள் சிக்னல் கொடுத்து உள்ளது. அப்போது



ஆழமாக யோசித்து முக்கிய மான முடிவினைச் சொந்தமாக எடுத்தார். கிடைக்கப்பெற்ற தகவல்கள் அனைத்தும் தவ றானது என்ற அறிக்கையை விடுவித்தார்.

அவர் தன்னுடைய நடவ டிக்கையை யாரிடமும் தெரி விக்கவில்லை. 1984ஆம் ஆண்டு ராணுவத்தில் இருந்து வெளியேறி, மாஸ்கோவின் புறநகர்ப் பகுதியில் வசிக்கத் தொடங்கினார். சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குப் பிறகு அவருடைய செயல் உலக அரங்கிற்கு தெரியவந்ததும் பல்வேறு பாராட்டுக் கடிதம் அவருடைய வீட்டை நிறைய செய்தது. இந்நிலையில், மாஸ்கோவின் புறநகர்ப் பகுதி யில் தன்னுடைய உறவினர்க ளுடன் வசித்துவந்த ஸ்டானிஸ் லாவ் பெட்ராவ், கடந்த மே மாதம் 19ஆம் திகதி மரணம் அடைந்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# இலங்கை கிரிக்கெட்டின் புதிய தேர்வுக் குழு உத்தியோகபூர்வமாக விவரம் அறிவிப்பு



விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவை கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஏற்கனவே வெளியிடப்பட்ட தகவலுக்கு அமைய, இலங்கை அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் க்ரஹம் லப்ரோயின் தலைமையின் கீழ் காமினி விக்ரமசிங்க, ஜெரி வௌடர்ஸ், அசன்க குருசிங்க மற்றும் சஜித் பெர்னாண்டோ ஆகியோர் புதிய தேர்வுக் குழு உறுப்பினர்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்பிற்கு அமைய, ஏற்கனவே சனத் ஜயசூரியவின் தலைமையில் இருந்த தேர்வுக் குழுவில் அங்கம் வகித்த அசன்க குருசிங்க இந்தப் புதிய குழுவிலும் இடம்பெறுகின்றார். இதற்கமைய, அவர் இலங்கைக் கிரிக்கெட்டின் முகாமையாளர் மற்றும் தேர்வுக் குழு உறுப்பினர் ஆகிய இரண்டு பதவிகளிலும் செயற்படவுள்ளார்.

மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரியின் பழைய மாணவரும் வேகப் பந்து வீச்சாளருமான லப்ரோய், கடந்த 1986ஆம் ஆண்டு முதல் 1992ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இலங்கைத் தேசிய அணிக்காக 9 டெஸ்ட் போட்டிகளிலும், 44 ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

ஜெரி வௌடர்ஸ், இலங்கை தேசிய அணியின் முகாமையாளராகச் செயற்பட்டுள்ளார். தற்பொழுது 44 வயதாகும் சஜித் பெர்னாண்டோ முதல்தரக் கிரிக்கெட் விளையாடியுள்ள முன்னாள் வீரர் என்பதுடன், பிரபலமான கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1989ஆம் ஆண்டு முதல் 1993ஆம்ஆண்டுவரைஇலங்கை அணியில் அங்கம் வகித்த முன்னாள் வீரரான காமினி விக்ரமசிங்க, இலங்கை அணிக்காக 3 டெஸ்ட் போட்டிகளிலும் நான்கு ஒரு நாள் போட்டிகளிலும் ஆடியுள்ளார்.

அடுத்த வாரம் ஐக்கிய அரபு இராட்சியத்தில் ஆரம்பமாகவுள்ள பாகிஸ்தான் அணிக்கு எதிரான இலங்கை அணியைத் தெரிவு செய்வதில் இருந்து இந்த புதிய தேர்வுக்குழு தமது பணியை ஆரம்பிக்கவுள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிராக 2 டெஸ்ட், 5 ஒரு நாள் மற்றும் 3 ரி-20 போட்டிகளைக் கொண்ட தொடர்களில் பங்கு கொள்ளவுள்ள இலங்கை கிரிக்கெட் அணி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இருந்து ஐக்கிய அரபு இராட்சியம் பயணமாகவுள்ளது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான இறுதி ரி-20 போட்டி லாகூரில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய தேர்வுக் குழு:

க்ரஹம் லப்ரோய் – தலைவர்
காமினி விக்ரமசிங்க
ஜெரி வௌடர்ஸ்
சஜித் பெர்னாண்டோ
அசன்க குருசிங்க

## விராட் கோஹ்லி – காதலி அனுஷ்கா 'பிஸ்னஸ் பார்ட்னர்ஸ்' ஆகின்றனர்!



சென்னை,செப்.22

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லியும் , அவரது காதலியான அனுஷ்கா சர்மாவும் இணைந்து ஹோட்டல் ஒன்று திறக்க உள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் விராட் கோஹ்லி மற்றும் பாலிவுட் நடிகை அனுஷ்கா சர்மா காதல் ஜோடி மிகவும் பிரபலம். கலை நிகழ்ச்சிகள், விழாக்கள் மற்றும் விருந்து நிகழ்ச்சிகளுக்கு இருவரும் ஒன்றாகத்தான் சுற்றிவருகிறார்கள்.

கடந்த 2013இல் ஷாம்பு விளம்பரத்தில் கோஹ்லி , அனுஷ்கா சேர்ந்து நடித்தனர். இந்திய அணியின் வெளிநாட்டு பயணங்களின் போது விராட் கோஹ்லியுடன் அனுஷ்காவும் அவ்வப்போது வெளிநாடும் செல்வது வழக்கம்.

இந்நிலையில் இருவரும் இணைந்து ஹோட்டல் ஒன்றைத் திறக்க உள்ளனர். இதற்காக மும்பை மற்றும் டெல்லியில் முதலீடு செய்ய உள்ளனர் எனவும் தகவல் கசிந்துள்ளது.

இதுவரை காதலர்களாக இருந்த இருவரும் தற்போது வர்த்தகக் கூட்டாளிகளாக மாறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## சம்பியனாகியது ஊரெழு றோயல் அணி



(கங்கர)

அராலி அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஊரெழு றோயல் அணி சம்பியனாகியது.

அராலி அண்ணா விளையாட்டுக்கழகம், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வந்தது. இந்தச் சுற்றுப்போட்டியின் அரையிறுதியில் நாவாந்துறை கலைவாணி அணி, ஆனைக்கோட்டை யூனியன் அணியையும், ஊரெழு றோயல் அணி, சுன்னாகம் நியு வொறியர்ஸ் அணியையும் வென்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தன.


இறுதிப்போட்டி 16 ஆம் திகதி அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.



முதற்பாதியாட்டத்தில் இரண்டு அணிகளும் தமக்குக் கிடைத்த வாய்ப்புக்களை சரியான முடித்தல் இல்லாமல் வீணாக்கின. இரண்டாவது பாதியில் றோயல் அணியின் கஜகோபன் தனது அணிக்காக கோல் ஒன்றை அடித்தார். பதில் கோல் அடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட கலைவாணி அணியின் எந்த எத்தனமும் பலனளிக்கவில்லை.

முடிவில் றோயல் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. இறுதிப்போட்டியின் நாயகனாக றோயல் அணியின் தர்மகுலநாதன் கஜகோபன் தெரிவு செய்யப்பட்டார்.





## பெண் குழந்தைப் பெற்ற செரீனாவின் கவலை இது!

உலகப் புகழ்பெற்ற டென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

சிறுவயதில் தன்னுடைய உடலமைப்பு ஆணை போன்று இருந்ததால் பல்வேறு அவமானங்களைத் தாம் சந்தித்தார் எனக் கூறும் செரீனா, தன்னுடைய மகளும் அதேபோன்று இருப்பதால் கவலைப்படுகிறாராம்.

இதுதொடர்பாக அவர் தனது தாயாருக்கு எழுதியுள்ள கடிதத்தில் –

அன்புள்ள அம்மா,

எனக்குத் தெரிந்த வலிமையான பெண் நீ. இதோ என் மகள், இவளும் என்னைப் போன்றே வலிமையான கை, கால்களைப் பெற்றிருக்கிறாள்.

15 வயது தொடங்கி நான் சந்தித்த சவால்களை அவளும் சந்திக்க போகிறாள். எப்படி சமாளிக்க போகிறேன் என்று தெரியவில்லை.

என்னைப் பார்த்துப் பலரும் ஆண் என்றனர், போதைப்பொருள் உட்கொள்கிறேன் என்றனர்.

வலுமையான உடலமைப்பு இருப்பதால் ஆண்கள் பிரிவில் போட்டியிட வேண்டும் என்றனர்.ஆனால் நான் இதைப் பெருமையாத்தான் பார்க்கிறேன், உயரமோ, குள்ளமோ, வளைவுகளுடன் கூடிய உடலோ அல்லது வலிமையான தசைகளைக் கொண்ட உடலோ அனைத்தும் ஒன்று தான்.

நாங்கள் பெண்கள். அதைப் பெருமையாகவும் கருதுகிறோம். அவ்வளவு தான். நான் சந்தித்த சவால்களை எதிர்கொண்டு அனைத்து கஷ்டங்களையும் சகித்துக் கொள்ளும் மனோபாவத்தைப் பெறுவதற்கு நீங்கள் தான் முன்மாதிரியாக இருந்தீர்கள். என்னுடைய மகளுக்கும் நான் அதைக் கற்பிக்க விரும்புகிறேன், நீ என்னுடன் இருப்பாய் என நம்பிக்கை கொடு. – என எழுதியுள்ளார். (உ)

# புதிய வீரர்களோடு பாகிஸ்தானை எதிர்கொள்ளவுள்ள இலங்கை டெஸ்ட் அணி




பாகிஸ்தான் அணியுடன் ஆரம்பமாகும் டெஸ்ட் தொடரில் மோதுவதற்காக ஐக்கிய அரபு இராச்சியம் பயணிக்கவுள்ள இலங்கை அணியில் சதீர சமரவிக்ரம மற்றும் ரோன் சில்வா ஆகிய அறிமுக வீரர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணியுடன் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட ஞாயிற்றுக்கிழமை இலங்கை அணி ஐக்கிய இராச்சியம் பயணிக்கவுள்ளது. இத்தொடரில் இலங்கை சார்பாக ஆடவுள்ள 15 வீரர்கள் அடங்கிய பட்டியலை புதிதாக நியமனம் செய்யப்பட்ட கிரஹம் லப்ரோய் தலைமையிலான தேசிய அணியின் தேர்வுக்குழாம் வெளியிட்டுள்ளது.

செப்ரெம்பர் 28ஆம் திகதி அபுதாபி நகரில் இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி ஆரம்பமாகின்றது. டுபாயில் ஆரம்பமாகும் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி, இலங்கை அணி விளையாடவுள்ள முதலாவது பகலிரவு டெஸ்ட் ஆட்டமாக அமையவுள்ளது.

நீண்ட கால எதிர்பார்ப்பாக காணப்பட்ட 22 வயதேயான இளம் துடுப்பாட்ட வீரர் சதீர சமரவிக்ரம முதன்முறையாக இலங்கை அணியில் விளையாடும் வாய்ப்பை இத்தொடர் மூலம் பெற்றுள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் சபை 2016, 2017 ஆம் ஆண்டின் பருவகாலத்தில் நடத்திய பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் 1016 ஓட்டங்களை (6 அரைச்சதங்கள் மற்றும் 3 சதங்களுடன்) கோல்ட்ஸ் அணிக்காக குவித்த சதீர சமரவிக்ரம அத்தொடரில் அதிக ஓட்டங்கள் சேர்த்த வீரராகப் பதிவாகியிருந்தார்.

உள்ளூர் போட்டிகளின் துடுப்பாட்ட ஜாம்பவானாக திகழும் ரோனென் சில்வாவும் இத்தொடர் மூலம் இலங்கை அணிக்கு முதற்தடவையாக அழைக்கப்பட்டுள்ளார். முதல்தரப் போட்டிகளில் 10 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டிருக்கும் சில்வா 100 இற்கு மேலான போட்டிகளில் ஆடி 18 சதங்களுடன் 26 அரைச் சதங்களினையும் விளாசியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் முன்னாள் தலைவரான அஞ்சலோ மத்தியூஸ் பயிற்சியின்போது தொடை தசையில் ஏற்பட்ட உபாதை காரணமாக தொடரில் உள்ளடக்கப்படவில்லை. மத்தியூஸின் இடத்தை நிரப்பும் விதமாகவே ரோனென் சில்வாவுக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறைந்த உயரம் கொண்ட துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான கௌசால் சில்வாவுக்கு இலங்கை அணியின் ஆரம்ப வீரராக மீண்டும் வருவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. இலங்கைக்காக இறுதியாக தென்னாபிரிக்க அணியுடனான சுற்றுப் பயணத்தில் ஆடியிருந்த சில்வா, இலங்கை டெஸ்ட் அணியின் ஆரம்ப வீரர் உப்புல் தரங்க டெஸ்ட் போட்டிகளில் இருந்து 6 மாதங்களுக்கு ஓய்வை எடுத்துக்கொண்டதன் காரணமாகவே அணிக்கு மீண்டும் நுழையும் சந்தர்ப்பத்தினைப் பெற்றிருக்கின்றார்.

இந்திய அணியுடனான ஒரு நாள் தொடரில் இரண்டு பெறுமதியான அரைச் சதங்களைக் குவித்து தனது திறமையை வெளிக்காட்டியிருந்த அழகிய துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான லஹிரு திரிமன்னவும் இந்த தொடர் மூலம் இலங்கை அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் மீண்டும் விளையாட சந்தர்ப்பத்தினைப் பெற்றுள்ளார். திரிமன்ன கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக டெஸ்ட் போட்டிகளில் இலங்கைக்காக விளையாடாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தில்ருவான் பெரேரா இந்திய அணியுடனான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் கைப்பற்றியிருப்பினும் இலங்கை அணிக் குழாத்தில் தனது இடத்தில் நீடிக்கின்றார். இவருடன் சேர்ந்து அணியின் சுழல் பந்துவீச்சு துறையினை ரங்கன ஹேரத் மற்றும் லக்ஷான் சந்தகன் ஆகியோர் வலுப்படுத்துவர்.

வேகப்பந்து வீச்சாளர்களான நுவன் பிரதீப் மற்றும் சுரங்க லக்மால் ஆகியோர் தமது உபாதைகளிலிருந்து மீண்டு பூரண உடற்தகுதியுடன் காணப்படுகின்றமையால் அவர்கள் லஹிரு கமகே மற்றும் இடதுகைப் பந்து வீச்சாளர் விஷ்வ பெர்னாந்துவுடன் அணியில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இந்திய அணியுடனான தொடரில் இலங்கையில் காணப்பட்ட இடது கை சுழல் பந்து வீரர் மலிந்து புஷ்பகுமார மற்றும் வலது கை வேகப்பந்து வீச்சாளர் லஹிரு குமார ஆகியோருக்கு இத்தொடரில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இலங்கை டெஸ்ட் குழாம்

திமுத் கருணாரத்ன, கௌசால் சில்வா, குசல் மெண்டிஸ், தினேஷ் சந்திமல் (அணித் தலைவர்), சதீர சமரவிக்ரம, லஹிரு திரிமன்ன (உப தலைவர்), நிரோன் திக்வெல்ல, தில்ருவான் பெரேரா, ரங்கன ஹேரத், சுரங்க லக்மால், நுவன் பிரதீப் , லஹிரு கமகே, விஷ்வ பெர்னாந்து, ரோனே சில்வா, லக்ஷன் சந்தகன், மலிந்த புஷ்பகுமார.

# உலக கிண்ணத் தொடரில் சாதிக்க தெளிவான திட்டங்கள் வகுப்பு

**- உப்புல் தரங்க -**

உலகக் கிண்ணத் தொடரில் சாதிக்க தெளிவான திட்டத்தை வகுத்துள்ளோம் என இலங்கை அணித் தலைவர் தரங்க கூறியுள்ளார்.

2019இல் நடக்கவிருக்கும் ஐ.சி.சி. உலகக் கிண்ணத் தொடருக்கு இலங்கை அணி நேரடியாகத் தகுதி பெற்றுள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் மேற்கிந்தியத் தீவு தோற்ற நிலையில், அந்த அணி நேரடி தகுதி வாய்ப்பை இழந்ததால் அந்த வாய்ப்பு இலங்கைக்குக் கிடைத்துள்ளது.

இதுகுறித்து இலங்கை அணி தலைவர் உப்புல் தரங்க கூறுகையில் –



நாங்கள் கடினமான சூழலில் இருக்கிறோம் என்பதை மறைப்பதற்கு இல்லை. இது போன்ற நேரத்திலும் எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ள இலங்கை ரசிகர்களுக்கு பெரியளவில் நன்றிகளைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஐ.சி.சி. எந்த வித தொடரை நடத்தினாலும், அதில் இலங்கை அணியின் ஆற்றல் வெளிப்படும். அதை மீண்டும் ஐ.சி.சி. உலக கிண்ணத் தொடரில் நிரூபிப்போம்.

உலகக் கிண்ணத் தொடரில் சாதிக்க தெளிவான திட்டத்தை நாங்கள் வகுத்துள்ள நிலையில், அதற்காக கடுமையாக உழைத்து வருகிறோம்.–என்று தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு ஒழுங்கற்ற மைதானம் வழங்கப்பட்ட விடயம் குறித்து விசாரணை



அண்மைய இலங்கை – இந்திய அணிகளுக்கு இடையிலான தொடரின் போது இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கப்பட்ட மைதானத்தில் முறைகேடுகள் இடம்பெற்றன எனக் கூறப்படுவதால், அது குறித்து சுயாதீனமாக விசாரணை செய்ய இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர கட்டளை பிறப்பித்துள்ளார்.

பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் வைத்து இலங்கை கிரிக்கெட் அணியின் எதிர்காலத் திட்டங்கள் பற்றி கலந்துரையாடப்பட்ட நிகழ்வொன்றின் போது, இலங்கை அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க கேட்டுக்கொண்டமைக்கு அமைவாகவே இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மலிங்க அண்மைய இந்திய அணியுடனான தொடரின் போது இலங்கை அணிக்கு பயிற்சிக்காக வழங்கப்பட்ட மைதானங்களில் சில அசௌகரியமான விடயங்கள் இடம்பெற்றன எனச் சுட்டிக்காட்டி, அது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் கூறியிருந்தார்.

இவ்வாறான விடயங்கள் நடந்திருக்கின்றன எனக் கூறப்பட்ட காரணத்தினால் ஒரு மேலதிக செயலாளரின் தலைமையில் அமைச்சு இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது –என அமைச்சர் தயாசிறி ஜயசேகர புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள விசாரணைகள் பற்றி தனது ஊடக அறிக்கையில் கருத்து தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் எதிர்காலத் திட்டமிடல்கள் தொடர்பான நிகழ்வில் தேசிய அணியின் அங்கத்தவர்கள், முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், இலங்கைக் கிரிக்கெட் வாரிய உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் இலங்கை கிரிக்கெட் அணி தற்போது முகம் கொடுக்கும் சவால்கள், உள்நாட்டு கிரிக்கெட் முறைமையில் மாற்றம் கொண்டுவருதல், தேசிய அணிக்கு வீரர்கள் உள்வாங்கும் முறைமை மற்றும் நிர்வாக ரீதியிலான விடயங்கள் போன்ற அனைத்தும் கலந்துரையாடப்பட்டிருந்தன.

“நாங்கள் புற்தரையுடன் அமைந்த மைதானத்தைக் கேட்டிருந்த போது, எமக்கு அவர்களால் அம்மைதானத்தில் புற்கள் அனைத்தும் நீக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தன என மலிங்க குற்றம் சுமத்தியிருந்தார். எமக்கு ஏன் புற்கள் முழுமையாக நீக்கப்பட்ட மைதானத்தை வழங்கியிருந்தீர்கள் எனக் கேட்டோம். அதற்கு அவர்கள் புற்கள் வெட்டும் இயந்திரத்தில் உள்ள கத்தியில் (Blade) தவறான ஒன்றினைப் பயன்படுத்திவிட்டோம் எனப் பதிலளித்தனர். இப்படியாக எமக்கு ஒருதடவை இடம்பெற்றால் பரவாயில்லை, இரண்டு தடவைகள் நடைபெற்றுள்ளன. நான் இந்த விடயத்தை அப்போது அதிகாரத்துக்கு உரியவர்களிடம் குறிப்பிட்டுக் காட்டியிருந்தேன். எனினும் எதுவும் நடைபெறவில்லை.

“நாம் இதனால்தான் போட்டியில் தோல்வியடைந்தோம் எனக் கூறவரவில்லை. இவ்வாறான விடயங்கள் எமக்கு சாதமாக நடைபெறவில்லை எனில், வீரர்கள் நம்பிக்கை இழந்து மன உளைச்சலுக்கு ஆளாகுவர்”.–என தமக்கு வழங்கப்பட்ட மைதானங்களில் தாம் எதிர்நோக்கிய அசௌகரியங்கள் பற்றி லசித் மலிங்க விளக்கமாகத் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் வீரருக்கு ஐந்து ஆண்டுகள் தடை



சூதாட்டப் புகாரில் சிக்கிய பாகிஸ்தான் கிரிக்கெட் வீரருக்கு ஐந்து ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி–20 போட்டிகள் நடத்தப்படுகின்றன. இரண்டாவது பருவகாலம் கடந்த பெப்ரவரி 9ஆம் திகதி முதல் மார்ச் 25ஆம் திகதி வரை நடந்தது.

இத்தொடரில் இஸ்லாமாபாத் யுனைட்டெட் அணி சார்பில் விளை யாடிய காலித் லாடிப் சூதாட்டத்தில் ஈடுபட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

இதுதொடர்பான வழக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்பு தீர்ப்பாயத்தில் நடந்து வந்த நிலையில் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு ஐந்து ஆண்டுகள் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று சக வீரரான ர்ஜீல் கானுக்கும் ஐந்து ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சகலரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிகாட்டல் குழுவின் தலைவர் என்ற முறையில் அந்தக் குழுவினால் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையைப் பேரவையில் நேற்றுக் காலை சமர்ப்பித்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பேரவை நேற்றுக் காலை சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடிய போதே இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அச்சமயம் பிரதமர் கூறியவை வருமாறு:–

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான முற்போக்கு யோசனைகளும் இதில் இடம்பெற்றுள்ளன. இன, சமய, சமூக, பாகுபாடற்ற அனைத்து இலங்கை மக்களுக்கும் பயன்பட கூடிய அரசமைப்பு ஒன்றை தயாரிப்பதே எமது நோக்கம். அத்துடன் பலம் வாய்ந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதன் மூலம் ஏற்படும் நன்மைகள் அனைத்து இலங்கையர்களுக்கும் சென்றடைவதை உறுதிப்படுத்தும் புதிய புரட்சிகரமான விடயங்களை உள்ளடக்கியதாக இதற்கான அரசமைப்பு இருக்கும். ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கும் அமைதி மற்றும் சமாதானத்தை உருவாக்குவதற்கும் இச்சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் .

காத்திரமான பொருளாதாரத்தை உருவாக்கி அனைவருக்கும் வளமான எதிர்காலத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் எமது பொது இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு இது போன்ற அரசமைப்பு மிகவும் இன்றியமையாததாகும். இதுவரை காலமும் நாம் அரசியல் வன்முறை மற்றும் மோதல்களில் சிக்கியிருந்தோம். நமது பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் அச்சுறுத்தலாக நிலவிய பிளவுகள் மற்றும் இடைவெளிகளை அகற்றுவதற்கான பாலம் ஒன்றை உருவாக்குவதற்கான மிகப்பெரிய வாய்ப்பு எமக்கு இதன் மூலம் கிடைத்துள்ளது. – என்றார் பிரதமர்.

புதிய அரசமைப்பில் பௌத்த மதத்துக்குரிய இடம் பாதுகாக்கப்படும். பௌத்த மதத்தின் அடிப்படையிலேயே சகல விடயங்களும் அணுகப்பட்டுள்ளன.

இந்த நாடு பௌத்தர்களை அதிகம் கொண்ட நாடு. இந்த நாட்டின் அரசமைப்பில் பௌத்த மதத்துக்குரிய இடம் பாதுகாக்கப்படுகின்றது. சமூகத்தில் அதற்குரிய முதன்மைத் தன்மை பாதுகாக்கப்படுகின்றது. புத்த பெருமான் போதித்ததெல்லாம், குரோதத்தினால், குரோதத்தை வெல்ல முடியாது என்பதாகும். குரோதமில்லாத நிலையினாலேயே குரோதத்தை வெல்ல முடியும்.

எமது இனத்துக்கு பௌத்த மதத்தைப் போதிப்பதன் மூலம் வழிகாட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தேவையில்லாத பிரச்சினையை உருவாக்கிக் கொண்டு, வீணான அச்சத்தை தோற்றுவித்துக் கொண்டு, பொருளாதாரத்தை அழித்துக் கொண்டு, மக்களைப் பிரித்துக் கூறுபோடுவதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லையெனவும் பிரதமர் கூறியுள்ளார்.

அரசியலமைப்பு ஒழுங்கமைப்புக் குழுவினால் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை, இன்று நாடாளுமன்றத்தில் கூடிய அரசமைப்பு சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் விரிவாக விவாதிக்கப்படும். மக்கள் அரங்கில் பேசுபொருளாக மாற்றப்படும். இதன் மூலம் முழுநாட்டுக்கும் பொருத்தமான அரசமைப்பு தயாரிக்கப்படல் வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

ஒக்ரோபர் மாதத்தில் நாடாளுமன்றம் கூடாத மூன்று நாள்களில் அரசமைப்புப் பேரவையைக் கூட்டி இந்த அறிக்கையை விவாதிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். – என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் ஆர். சம்பந்தன், அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் அமைச்சர் மனோ கணேசன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குப் பின்னர் இந்த இடைக்கால அறிக்கையை ஒட்டி அரசமைப்புப் பேரவையில் நடைபெறும் மூன்று நாள் விவாதங்களின் போது பல்வேறு எம்பிக்களும் முன்வைக்கும் கருத்துக்களையும் வழிகாட்டல் குழு உள்வாங்கும்.

அவற்றின் அடிப்படையில் நகல் யாப்பு தயாரிக்கும் பணி முன்னெடுக்கப்படும் – என்றார் அவர். (உ)

## 17 நாடுகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கி வரும் ஐ.தே.கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரத்ன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இடைக்கால அறிக்கை வரையான அரசமைப்பு உருவாக்க முயற்சிகளின் முன்னேற்றங்கள் குறித்து விளக்கமளித்தனர்.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து, ஜேர்மனி ஆகியவை உட்பட பதினேழு நாடுகளின் இராஜதந்திரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கு கொண்டு கேள்விகளை எழுப்பி விடயங்களைத் தெளிவு படுத்திக் கொண்டனர் என அறியவந்தது.

புதிய அரசமைப்பு முயற்சிகள், அதன் நடைமுறையாக்கம் போன்றவற்றில் சர்வதேச சமூகம் எவ்வாறான உதவிகளை வழங்கலாம் என்பன போன்ற விடயங்களும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டன. (உ)

## ஒக்ரோபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என நாடாளுமன்ற விவகாரங்களைக் கையாளும் சில வட்டாரங்கள் 'காலைக்கதிர்' நாளிதழுக்குத் தெரிவித்தன. (உ)

## நியூயோர்க்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு மாதிரி விசாரணை மையமாக தமிழர்கள் மேற்கொண்டிருந்த போராட்டம் பலரதும் கவனத்தை ஈர்த்தது.

இலங்கையின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவே இருக்கின்ற நிலையில் இலங்கை ஒரு குற்றவாளி நாடு என அடையாளப்படுத்தும் வகையில், 'மைத்திரி' குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டிருந்தார்.

மைத்திரிபால சிறினேவை அடையாளப்படுத்தும் வகையில் அவரது முகம் பதிக்கப்பட்ட முகமூடியுடன் ஒருவர் குற்றவாளிக் கூண்டில் நின்றிருந்தார். இலங்கை அரசு மீதான தமிழினப் படுகொலைக் குற்றச்சாட்டுக்களை வழக்குரைஞர்களாக வேடம் அணிந்திருந்தோர் அடுக்கினர்.

பலரது கவனத்தினைப் பெற்றிருந்த இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் உரையாற்றியிருந்தார். (உ)

## சகலரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாதகமான நிலைமைகளும் உள்ளன."

–இவ்வாறு முழு நம்பிக்கையுடன் கூறினார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம் பந்தன்.

புதிய அரசமைப்புக் கான இடைக்கால அறிக் கையைக் கவனத்தில் எடுப் பதற்காக நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாக நேற்றுக் காலை கூடியது. அச்சமயம் அங்கு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

பிரதமரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையிலும் அதனோடு சேர்த்து முன்வைக்கப்பட்டுள்ள இணைப்புக்களிலும் அடங்கியுள்ள விடயங்கள் பற்றிய கருத்துக்களைத் தற்பொழுது கூறுவது எனது எண்ணமல்ல. அத்தகைய நோக்கத்துக்காக அரசமைப்புச் சபையின் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள கூட்டங்களில் அந்த விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

நாங்கள் ஈடுபட்டுள்ள செயல்முறையின் சில விடயங்களின் அவசரமான தொடர்பு மற்றும் முக்கியத்துவம் பற்றியே குறிப்பிட்டுக் கூற விரும்புகின்றேன்.

சனநாயக சோசலிசக் குடியரசாகிய எமது நாட்டிற்கான அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் செயல்முறையில் நாம் அனைவரும் ஈடுபட்டுள்ளோம். அடிப்படை மீயுயர் சட்டமாகிய இலங்கையின் அரசமைப்பை உருவாக்கும் பணியில் நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் சார்பாக இலங்கை நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் ஈடுபட்டுள்ளோம்.

பிளவுபடாத, பிரிக்கப்பட முடியாத, ஐக்கிய இலங்கை என்ற உறுதியான கட்டமைப்புக்கமைவாக இது மேற்கொள்ளப்படுகின்றது. இந்தக் கட்டமைப்பின் படியே நாங்கள் யாவரும் சுயமாக விரும்பி ஒப்புக்கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் கூடிய வகையில் அரசமைப்பு உருவாக்கப்படும்.

நியாயமான, ஏற்புடையதான, போதியளவான தேசிய ஒருங்கிசைவின் அடிப்படையில் உருவாக்கப்படும் அரசமைப்புச் செயற்பாடுகள் வெற்றிகரமாக முடிவுறும்போது அது இந்தப் பிரச்சினைக்கான உறுதியான முடிவைக் கொண்டுவரும்.

நாட்டின் மீயுயர் சட்டத்தின் அடிப்படையிலும், அதன் மக்களுடைய சுயவிருப்பத்துடனும், சம மதத்துடனும் இலங்கை ஐக்கியமான, பிளவுபடாத, பிரிக்கப்பட முடியாததாகத் தொடர்ந்தும் இருக்கும்.

வித்தியாசமான அடையாளங்களைக் கொண்டுள்ள வேறுபட்ட மக்களான சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர் போன்றோர் வாழுகின்ற நாடாக இலங்கை உள்ளது. அத்துடன் இலங்கை பல்வேறு அரசியற் கட்சிகள் செயற்படுகின்ற ஜனநாயகம் தொழிற்படுகின்ற நாடாகும். இரண்டு பிரதான அரசியற் கட்சிகளும் மாறிமாறி இந்த நாட்டின் அரசாங்கத்தை அமைத்து ஆட்சி செய்திருக்கும் அதே வேளை, ஏனைய கட்சிகளும் தங்களுடைய வகிபாகத்தைக் கொண்டிருந்தன.

இலங்கையில் இதுவரை கட்டமைக்கப்பட்ட அரசமைப்புக்கள் எதுவும் அதன் வேறுபட்ட மக்களின், குறிப்பாகத் தமிழ் மக்களின் இருதரப்பு ஒருங்கிசைவைப் பெற்றிருக்கவில்லை; அல்லது இருபிரதான கட்சிகளின் மற்றும் ஏனைய அரசியற் கட்சிகளின் இருதரப்பு ஒருங்கிசைவையும் பெற்றிருக்கவில்லை. அரசமைப்பு உருவாக்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் அதற்கான ஒரு வாய்ப்பை முதற்தடவையாகத் தந்துள்ளன. அத்தகைய நியாயமான ஒருங்கிசைவின் அடிப்படையிலான அரசமைப்பொன்றே நாட்டின் அடிப்படையான மீயுயர் சட்டமாக நாட்டின் அரசமைப்புக்கு அவசியமாகத் தேவையாகவுள்ள சட்டரீதியான அந்தஸ்தையும் நம்பகத்தன்மையையும் பெற்றுத்தரும்.

இதுவே, அரசமைப்பை அரசியல் சூழ்நிலைகளின் பிடிக்குள் இருந்து வெளியே கொண்டுவந்து, இலங்கையை ஒரு தேசமாகவும் இலங்கையர் என்ற அடையாளத்தையும் காட்டும் பண்புகளை உருவாக்கக்கூடிய அரசமைப்பொன்றைப் பெற்றுத் தரும். இலங்கை சுதந்திரம் அடைந்த எழுபது ஆண்டுகளாக இந்த நிலைமையை அடைய எம்மால் முடியவில்லை.

1987 – 1988 ஆண்டு தொடக்கம் அரசமைப்பு உருவாக்கச் செயற்பாடுகள் தொடர்கின்றன. செயல்வலு குறைந்ததாக இருந்த போதும், அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தமே மத்திக்கும் மாகாணங்களுக்குமிடையிலான அதிகாரப் பங்கீட்டை முதற்தடவையாக அரசமைப்புக்குள் உள்ளடக்கியது. அப்பொழுது தொடக்கம் பின்வந்த ஜனாதிபதிகளும் அரசாங்கங்களும் தேசியப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வைக் காண்பதற்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய முன்னேற்றகரமான பிரேரணைகளை முன்வைத்தனர். ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தில் மங்கள முனசிங்க தெரிவுக்குழுவின் பிரேரணைகள் வந்தன. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் அமைச்சரவையின் அனுமதியுடன் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அரசமைப்புப் பிரேரணைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவரால் நியமிக்கப்பட்ட பல்லின நிபுணர்களின் பிரேரணைகள் உருவாக்கப்பட்டமையோடு, பேராசிரியர் திஸ்ஸ விதாரணவைத் தலைவராகக் கொண்ட சகல கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குழு அதன் அறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பித்திருந்தது.

இப்போதைக்கு அவை பற்றிய விவரங்களுக்குள் நான் போகவில்லை. அத்தகைய பிரேரணைகள் பல்வேறு புறம்பான காரணங்களுக்காக அரசமைப்புடன் சேர்க்கப்படாவிட்டாலும் அப்பிரேரணைகள் தொடர்பாகக் கணிசமான ஒருங்கிசைவு காணப்பட்டதென்பதைத் தெரிவிப்பது போதுமானதென எண்ணுகிறேன்.

உண்மையில் இது முன்னைய செயற்பாடுகளின் தொடர்ச்சியெனக் குறிப்பிட்டுக் கூறுவதோடு, இந்தச் செயற்பாடு முழுமையாக வித்தியாசமான ஒரு சூழ்நிலையில் இடம்பெறுவதனால், இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாதென எல்லோரும் நியாயமாகவும் உறுதியுடனும் இருந்தால் இது வெற்றியடையக் கூடிய எல்லாச் சாதகமான நிலைமைகளும் உள்ளன.

தமது அடையாளமும், கௌரவமும் அங்கீகரிக்கப்படும் நியாயமானதும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதுமான அரசமைப்பு ஏற்பாடுகளே தமிழ்பேசும் மக்களின் நீண்டகால அபிலாஷையாக இருந்து வருகின்றது.

உலகத்தில் பரவலாக இத்தகைய ஒழுங்கு முறைகள் இருக்கின்றன. தீர்வுகாணப்படாத நிலைமைகளின் விளைவாக முழு நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் பல்வேறு பக்க விளைவுகள் ஏற்பட்டுள்ளன. கல்வியறிவுடைய தகுதிவாய்ந்த இந்த நாட்டின் பிரஜைகள் – குறிப்பாகத் தமிழர்களும் சிங்களவர்களும் – நாட்டைவிட்டு வெளியேறி பிற நாடுகளில் புகலிடம் பெற்றுள்ளமையினால் இந்த நாடு திறமையான வர்களைப் பாரிய அளவில் இழந்துள்ளது; பல்வேறு வழிகளிலும் இந்த நாட்டின் எதிர்காலத் திற்குப் பாதிப்புஏற்படும் வகையில் சர்வதேச ரீதியில் நாட்டின் பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளது.

நாங்கள் எமது நாட்டின் நற்பெயரை மீட்டெடுத்து சர்வதேசத்தின் மதிப்பைப் பெறவேண்டிய தேவை உள்ளது. எமது பொருளாதாரம் பாரிய அளவில் குறைபாடுடையதாக உள்ளதோடு, முன்னர் எமது வாழ்க்கைத் தரத்தை விடப் பின்தங்கிய நிலையில் இருந்த இந்தப் பிராந்தியத்தின் ஏனைய நாடுகள் வேகமாக முன்னேற்றமடைந்து இன்று நாம் வாழும் வாழ்க்கைத்தரத்தை விட மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டவையாக இருப்பதால், பொருளாதார ரீதியில் நாம் மிகவும் பின்னடைந்துள்ளோம். பாதுகாப்புச் செலவினங்களுக்காக பாரிய தொகையைச் செலவிட வேண்டியுள்ளதால் முக்கியமான துறைகளில் அபிவிருத்திகளை மேற்கொள்ள வளப் பற்றாக்குறை தடையாக உள்ளமை பின்னடைவுக்குக் காரணமாகின்றது.

இத்தகைய காரணிகளே புதிய மீயுயர் அடிப்படைச் சட்டத்தின் மீது ஒரு புதிய எதிர்காலத்தை உருவாக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்தப் புனிதமான பணியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்துவதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். –என்றார் சம்பந்தன். (உ)

## தேர்தல்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகக் கட்டமைப்புக்களை சிதைத்து அழிக்கின்றது. நல்லாட்சி.'"

– இவ்வாறு குறிப்பிட்டு இந்த நடவடிக்கையை காட்டமாகக் கண்டித்திருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஐக்கிய தேசியக் கட்சி, அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகிய நல்லாட்சியின் சதிகாரர்கள் ஒன்றிணைந்து தினம் குறிப்பிடாது மாகாண சபைத் தேர்தல்களைத் தள்ளிப்போடும் திட்டத்தை சட்டமாக அரங்கேற்றியுள்ளனர் என்றும் தமது ஓர் அறிக்கையில் காட்டமாகக் கண்டித்திருக்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

மாகாண சபைத் தேர்தலை இருபதாவது அரமைப்புத் திருத்தச் சட்டம் மூலம் நடத்தாது தள்ளிப்போட முயன்றார்கள்.

அதற்கு உயர் நீதிமன்றம் தடைபோட்டது. அதையே பின்கதவால் – வேறு வழிகளால் – உயர்நீதிமன்றில் வழிகாட்டலுக்கு மாறான வகையில் – 'மாகாண தேர்தல்கள் திருத்தச் சட்டம்' என்ற பெயரில் நிறைவேற்று கின்றனர் என்றும் அவர் கூறினார். (உ)

# படைவீரர்கள் மீது கை வைக்க யாருக்கும் இடமளிக்கப்படாது!



## சஜித் பிரேமதாச கூறுகிறார்

கொழும்பு, செப். 22

படைவீரர்கள் மீது கை வைப்பதற்கு யாருக்கும் இடமளிக்கப்படாது என வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை திம்புலாகல மிவன்புரவில் வீடமைப்பு திட்டமொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சி அரசு படைவீரர்களை காட்டிக் கொடுக்கின்றது, படைவீரர்களை சொற்ப பணத்திற்கு விற்பனை செய்கின்றனர், படைவீரர்களைப் பயன் படுத்தி வெளிநாடுகளுடன் அரசு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுகின்றது என எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் முற்று முழுதிலும் பொய்யானவை. எதிர்க்கட்சியினர் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது படைவீரர்கள் மீதான நேசத்தினால் அல்ல.

மீளவும் அலரி மாளிகையையும், ஜனாதிபதி மாளிகையையும் கைப்பற்றிக் கொள்ளும் தீராத மோகத்தினாலாகும்.

படைவீரர்கள் மீது கடந்த அரசு அன்பு செலுத்தியிருந்தால் 40,000 சிவில் பாதுகாப்புப் படையினரை ஏன் நிரந்தரமாக்கவில்லை?

ஓய்வூதியம் ஏன் வழங்கப்படவில்லை? சிவில் பாதுகாப்பு படையினரின் உரிமைகள் ஏன் பாதுகாக்கப்படவில்லை? என நான் கேள்வி எழுப்புகின்றேன்.

தங்களது சுயலாப அரசியல் நோக்கங்களை அடைந்து கொள்ளும் நோக்கில் இவ்வாறு போலிப் பிரசாரங்கள் செய்கின்றனர்.

நல்லாட்சி அரசாங்கமே, 40,000 சிவில் பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர்களை நிரந்தரமாக்கியுள்ளதுடன் அவர்களின் உரிமைகளையும் உறுதி செய்துள்ளது என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (க)

*50 லட்சம் ரூபா பெறுமதியான*

## போதை மாத்திரை வைத்திருந்தோர் பொலிஸாரிடம் மாட்டினார்கள்!

கொழும்பு, செப். 22

கொழும்பில் ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான போதை மாத்திரைகளை வைத்திருந்த சந்தேக நபர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு வடக்கு விசேட பொலிஸ் பிரிவினரால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய மோசடித் தடுப்புப் பொலிஸார் கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில், இந்த மாத்திரைகளுடன் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரின் ஊடாக, சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

மேலும், இந்த போதை மாத்திரைகளுக்கு, மேலதிகமாக பத்து கிராம் ஹெரோயின் போதைப் பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## முஸ்லிம் மக்களை ஆதரிக்கின்றேன்; தலைமை குறித்து வெட்கப்படுகிறேன்



## ஞானசாரதேரர் தெரிவிக்கிறார்

கொழும்பு, செப். 22

மியன்மார் - ரோஹிங்யாவில் இடம்பெறும் பிரச்சினைகளுக்கு மக்களைக் கொலை செய்வதன் மூலம் தீர்வு காண முடியாது. நாம் அதை ஆதரிக்கவும் இல்லை என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனா அமைப் பின் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டிலுள்ள முஸ்லிம் அரசியல் தலைமைகள் குறித்து நான் வெட்கப்படுகின்றேன்.

இலங்கையிலுள்ள தூதரகங்களுக்குச் சென்று இங்குள்ள முஸ்லிம்கள் நிம்மதியற்று இருக்கின்றனர் எனவும், அவர்கள் நிந்தனை செய்யப்படுகின்றனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்து வருகின்றார்.

இலங்கையில் முஸ்லிம்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன எனத் தெரிவிக்கும் இவர், ரோஹிங்ய அகதிகளை ஏன் இலங்கைக்கு அழைத்து வர முயற்சிக்கின்றார் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

நான் சிங்கள மக்களை மதிப்பது போல் நாட்டிலிருக்கும் முஸ்லிம் மக்களையும் மதிக்கின்றேன், ஆதரிக்கின்றேன், ஆனால் மியன்மாரை வெறுத்து நடக்கவும் முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு!

கொழும்பு, செப். 22



குறுகிய கால டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் காரணமாக டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை 90 வீதம் குறைந்துள்ளது என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தகவல் வெளியிட்டுள்ளார்.

தற்போதைய நிலையில் இலங்கை முழுவதிலும் உள்ள மருத்துவமனைகளில் 900 இற்கும் குறைவான டெங்கு நோயாளர்களே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனினும், எதிர்வரும் பருவ மழைக்காலத்தில் மீண்டும் டெங்கு தலைதூக்கும் அபாயம் காணப்படுகின்றது.

இதனைக்கருத்திற் கொண்டு நேற்றைய தினம் தொடக்கம் ஒருவாரம் வரையிலான காலப்பகுதிக்கு நாடு தழுவிய ரீதியில் தொடர்ச்சியான டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு செயற்படுத்தவுள்ளது.

இதற்காக முப்படையினருடன் இணைந்து சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட மூவாயிரம் குழுக்கள் விசேட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

## ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் ஒன்று சேர்ந்த மக்கள்!






யாழ்ப்பாணம், செப். 22

மியன்மார் நாட்டில் ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதலை கண்டித்து வட, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

நேற்று மு.ப. 11 மணிக்கு யாழ். கைலாய பிள்ளையார் கோவிலுக்கு அருகில் இந்த கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டத்தின் நிறைவில் நாவலர் வீதியில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது. தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இணைந்து முன்னெடுத்த இந்தப் போராட்டத்தில், பல மாவட்டங்களில் இருந்தும் பெருமளவிலானோர் கலந்து கொண்டனர்.

படுகொலைகளை நிறுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியைப் பெற்றுக் கொடுக்க ஐ.நா. சபை ஆணையாளர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனபோராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



# ஐ.நா. மனித உரிமை ஆணையாளரினால் நாட்டின் இறைமைக்கே அச்சுறுத்தலாம்

## அரசின் நடவடிக்கை என்னவென தினேஷ் கேள்வி

கொழும்பு,செப்.22

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் ராட் அல் ஹுசைன், இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்க முயற்சித்திருக்கிறார் என கூட்டு எதிரணியின் எம்.பியான தினேஷ் குணவர்தன தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேடகூற்றொன்றை விடுத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

ஜெனீவாவில் தற்போது நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 36 ஆவது அமர்வை ஒட்டி, கடந்த 11 ஆம் திகதி ஆணையாளர் செய்ட் ராட் அல் ஹுசைன், ஆற்றிய ஆரம்ப உரை, இலங்கையின் உள் விவகாரத்தில் நேரடியான தலையீடாக அமைந்திருந்தது. சர்வதேச மட்டத்தில், இலங்கை அனைத்துப் பிரச்சினைகளில் இருந்தும் விடுபட்டு விட்டதாக ஜனாதிபதியும் பிரதமரும், அரசாங்கமும் தொடர்ந்தும் தெரிவித்து வந்துள்ளனர். எனினும், ஆணையாளரின் இந்த அறிக்கையானது, இலங்கையின் உள் விவகாரத்தில் மீண்டும் நேரடியாகத் தலையீடு செய்வதாக அமைந்துள்ளது.

இது பாரதூரமான பிரச்சினையாகும். இறையாண்மையுள்ள நாட்டை அச்சுறுத்த ஐ.நா. ஆணையாளர் முயற்சித்திருக்கிறார். இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்பதையும் இந்த விடயத்தில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்னவென்பதையும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் சபைக்கு அறிய தர வேண்டும் – என்றும் வலியுறுத்தினார்.

# ஐ.நா. ஆணையர் குறித்த கேள்விக்கு பதிலளிக்க மூன்று வாரங்கள் தேவை

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.22

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செய்ட் ராட் அல் ஹுசைன், தொடர்பில் இலங்கை நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி தொடர்பான விவகாரம் பாரதூரமானது. ஆகையால், இதற்கு இன்னும் மூன்று வாரங்களில் பதிலளிக்கப்படும் என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் எம்.பியான தினேஷ் குணவர்தன எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதனிடையே எழுந்த, தினேஷ் குணவர்தன எம்.பி, இது நாட்டுக்கு அச்சுறுத்தல் மிக்க விவகாரம் என்பதால், விரைந்து பதிலளிக்கப்பட வேண்டும். இதற்குப் பதிலளிப்பதற்கு, 3 வார காலம் எடுத்துக் கொள்ள முடியாது என்று குறிப்பிட்டார்.

குறுக்கிட்ட அமைச்சர் திலக் மாரப்பன, இதற்குப் பதிலளிக்க 3 வார காலம் எடுத்துக் கொள்வதால், அதற்குள் நாட்டுக்கு எந்த சேதமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை என்றார்.

இதன்போது கருத்துரைத்த சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, எட்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றியே இந்த கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. தற்போதைய அரசாங்கம் ஆட் சிக்கு வந்து 2 வருடங்கள் மட்டுமே ஆகிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

இருதரப்புக் கருத்து மோதல்களையும் அவதானித்த சபாநாயகர் கரு ஜயசூரிய, எவ்வாறிருப் பினும் தினேஷ் குணவர்தன எம்.பி. கேட்ட கேள்விக்கு, முடிந்தளவு விரைந்து பதிலை வழங்குமாறு கேட் டுக் கொண்டார். (உ)

# வடமராட்சி கிழக்கு மக்கள் நேற்று கவனவீர்ப்புப் போர்

*(நிதர்ஷன்)*






வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் மக்களின் வாழ்விடங்கள் மற்றும் தொழில் புரியும் இடங்களை உள்ளடக்கி வன ஜீவராசிகள் தேசிய சரணாலயம் உருவாக்கியமையைக் கண்டித்து கவனவீர்ப்புப் போராட்டமொன்றை அப்பகுதி மக்கள் நேற்று முன்னெடுத்தனர்.

வனஜீவராசிகள் தேசிய சரணாலயம் கட்டைக்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பகுதிகளில் மக்களின் வாழ்விடங்களையும் தொழில் புரியும் பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது.

இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகள் தமது பூர்வீக நிலங்கள் என்றும் அதற்கான காணி உறுதிப் பத்திரங்கள் தம்மிடம் இருக்கின்றன எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே தமது பூர்வீக நிலங்களை ஆக்கிரமிக்க இடமளிக்கப்போவதில்லை என்றும் தமது நிலையைக் கவனத்தில்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். தமது கோரிக்கை நிறைவேறும் வரை கவனவீர்ப்பு போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தின் முன்பாகவே இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

'எமது ஜீவனோபாயத்தை அழிக்காதே', 'வன ஜீவராசிகளுக்கு கொடுக்கும் முக்கியம் எமக்கு இல்லையா?', 'மக்களின் அன்றாட செயற்பாட்டைக் குலைக் காதே!', 'அரசே சுண்டிக்குளம் மக்களை மீள் குடியேற்றம் செய்' என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டக்காரர்கள் தாங்கி நின்றனர்.




## பல லட்சம் ரூபா பெறுமதிக்கு

# போலி கனேடியன் டொலர்களை மாற்ற முயன்றவர்கள் சிக்கினர்

*(நிதர்ஷன்)*





போலி கனேடியன் டொலர்களை மாற்றுவதற்கு முயற்சித்த இருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையிலான புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த இருவரும் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். நகரில் உள்ள நாணய மாற்று நிலையம் ஒன்றுக்கு இளைஞர் ஒருவர் 10 ஆயிரத்து நூறு போலி கனேடியன் டொலர்களை மாற்றுவதற்குச் சென்றுள்ளார்.

அவர் கொண்டு வந்த கனேடியன் டொலர்கள் அனைத்தும் போலி என நாணய மாற்று நிலையத்தில் உள்ளவர் கண்டு பிடித்துள்ளார். அவர் உடனடியாக யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையிலான புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த புலனாய்வுப் பிரிவினர் நாணயம் மாற்றுவதற்காக வந்த இளைஞரை கைது செய்து விசாரணை மேற்கொண்டனர். சித்தன்கேணிப் பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவரே போலி நாணயங்களை மாற்றிக்கொண்டு வருமாறு தனக்கு வழங்கினார் என விசாரணையின் போது அவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து சித்தன்கேணிப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகரும் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையுடன் அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

விசாரணையின் பின்னர் அவர்களை யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பத்தாயிரத்து நூறு கனேடிய டொலர் என்பது இலங்கை நாணயத்தின் மதிப்பின்படி பலலட்சம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.


அமரர் திரு. திருமதி மு. க. சின்னையா சௌபாக்கியவதி (பாக்கியம்) நினைவாக...

தமிழ்த்தாய் மன்றம் நடாத்தும்

**இலவச மருத்துவ முகாம்**

இடம் : 31, புதிய செங்குந்த வீதி, சட்டநாதர் வீதி ஊடாக, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

திகதி : 5, 6, 7 ஒக்டோபர் 2017 காலை 7.00 முதல் 12.00 மணி

☞ இலவச நீரிழிவு பரிசோதனை (blood sugar)

☞ இலவச இரத்த அழுத்த பரிசோதனை (blood pressure)

✠ 5 ஆம் திகதி ஆங்கில வைத்தியர்களின் பரிசோதனை

✠ 6 ஆம் திகதி ஆயுர்வேத வைத்தியர்களின் பரிசோதனை

✠ 7 ஆம் திகதி இயற்கை வைத்தியர்களின் சகல நோய்களுக்குமான இயற்கை வைத்தியமும் நோய்வராமல் எம்மைப் பாதுகாப்பதற்கான ஆலோசனைகளும்.

இலவச நீரிழிவு பரிசோதனை செய்யவிரும்பும் அனைவரும் 12 மணித்தியாலங்கள் நீர், உணவு அருந்தாமல் 5 திகதி போயா தினத்தன்று காலை 7 மணிக்கு வாருங்கள். பரிசோதனையின் பின் காலை உணவு வழங்கப்படும்.

கலந்து கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டியே 31, புதிய செங்குந்தவீதி, சட்டநாதர் வீதி ஊடாக, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் மாலை 4.00 முதல் 6.00 மணிக்குள் 02.10.2017 இற்கு முன் பதிவு செய்து கொள்ளவேண்டும். (077 4626278)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.